


"அஞ்சு பேர் செத்ததுக்கு ஆறு விசாரணைக்குழுவாம். உதெல்லாம் ஆற வைக்கிற வேலை கண்டியளோ"

Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 59

புதன்கிழமை
24 ஜனவரி 2024

தை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## நயினை நாகபூஷணிக்கு இன்று கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஜன. 24
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 9.38 மணி முதல் முற்பகல் 11.20 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. 15



## இலங்கையில் தொடர்ந்து தமிழ்ச் சமூகம் வஞ்சிப்பு

### கனேடியப் பிரதமர் ட்ரூடோ காட்டம்

கொழும்பு, ஜனவரி 24
இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் சவால்களுக்குட்பட்டு வருகின்றன. எனவே தமிழ்ச் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் என்று கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். 15

## சுதந்திரத்தைப் பறிக்கும் பயங்கரமான சட்டவரைவு

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 24
நாட்டு மக்களின் சுதந்திரத்தையும், இருப்பையும் பறிக்கும் பயங்கரமானதொரு ஏற்பாடே நிகழ்நிலைக் காப்பு சட்டவரைவாகும். இப்படியான நடவடிக்கைகள் இந்த நாட்டை அதலபாதாளத்துக்கே கொண்டு செல்லும் - என்று இலங்கைத் தமிழரசுக் 15

## கச்சதீவில் இம்முறை 8,000 பக்தர்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 24
யாழ்ப்பாணம் கச்சதீவுத் திருவிழாவில் இம்முறை 8 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## தொடர் காய்ச்சல் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜன. 24
தொடர் காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார். கல்லாறு பகுதியைச் சேர்ந்த கந்தையா 15

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்;

## பல்வேறு நாடுகளுக்கு விரிகிறது போராட்டம்!

வவுனியா, ஜன. 24
வவுனியாவில் தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், தமது போராட்டத்தை உலகின் பல்வேறு நாடுகளுக்கு விரிவுபடுத்தவுள்ளதாக நேற்றுத் தெரிவித் 15

## பெலியத்த படுகொலைகள் விசாரிக்க ஆறு குழுக்கள்!

கொழும்பு, ஜன. 24
பெலியத்த பகுதியில் அரசியல் கட்சி தலைவர் உட்பட ஐவர் சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் ஆறு விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணையில் இறங்கியுள்ளன. 15

## மூளையில் கட்டி: பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24
மூளையில் ஏற்பட்டிருந்த கட்டி காரணமாக குடும்பப்பெண்ணொருவர் நேற்று உயிரிழந்தார். வவுனியா - நெடுங்கேணிப் பகுதியைச் சேர்ந்த ஞானரூபன் வசந்தகுமாரி (வயது - 50) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். 15




## புலிகளை நினைவுகூர்ந்தமை அரசமைப்பை மீறும் செயல்!

### நாடாளுமன்றத்தில் நேற்று புலம்பித்தள்ளிய வீரசேகர

கொழும்பு, ஜன. 24
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்குச்சென்று புலிகளை நினைவுகூர்ந்தமை 15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கம் கோரல்

யாழ். மாநகரசபையினால் பவளவிழா மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்களை நாளை 25ஆம் திகதி mcjaffna mailf@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்ப முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக்கங்கள் அனைத்தும் மாநகரசபையின் கடந்தகால வரலாறு, செய்யப்பட்ட, செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்கள், மாநகரசபை தொடர்பில் எதிர்காலத்தில் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் சார்ந்ததாக ஏ-4 தாளில் 3 முதல் 5 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும். வேறு நூல்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஆக்கங்கள் வெளியிடுதல் தொடர்பான அனைத்து தெரிவுகளும் மலர் வெளியீட்டுக் குழுவாலே தீர்மானிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# உவராகும் அபாயத்தில் கிளி. வன்னேரிக்குளம்!

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜன.24**

**கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தை உவர்ப் பரம்பலிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என கிராம மக்களால் விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.**

வன்னேரிக்குளம் கிராமத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வாழ்கின்றனர். கிராம மக்கள் 2010 ஆம் ஆண்டிலிருந்து வன்னேரிக்குளத்தின் உவர்ப் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும், கிராம மட்டத்திலும் பல கூட்டங்களில் கோரிக்கை விடுத்துள்ளனர். அதுதொடர்பாக தற்போதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (ப13)

### கச்சதீவுத் திருவிழா

## உணவு ஏற்பாட்டில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணம், கச்சதீவு அந்தோனியார் உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கான உணவு வழங்கலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற முன்னாயத்தக் கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இம்முறை அந்தோனியார் ஆலய உற்சவத்தில் பங்கேற்கவுள்ள 8 ஆயிரம் பக்தர்களுக்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட ஆயர் இல்லம், மாவட்ட செயலகம் கடற்படையினரால் காலை உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தில் சமைப்பதற்கு யாருக்கும் அனுமதிவழங்கப்படமாட்டாது என்று அவர் தெரிவித்துள்ளார். (ப-26)

## உடைமையில் மாவா பாக்கு இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன.24

மாவா பாக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், 23 வயதான சந்தேகநபரிடம் இருந்து 15 கிராம் மாவா பாக்குக் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் சந்தேகநபர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## கசிப்புடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன.24

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று ஆனைக்கோட்டையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இளைஞர் ஒருவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட்ட போது அவரிடம் இருந்து கசிப்பு மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர் 29 வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் எனத் தெரிவித்தனர். (எ-125)



## ஊர்காவற்றுறையில் பஸ்கள் மோதி விபத்து

### நால்வர் சிகிச்சையில்

ஊர்காவற்றுறை பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் தனியார் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் நடந்துள்ளது.

ஒருவர்படுகாயமடைந்த நிலையில், மூவர் சிறியளவான காயத்துடனும் சிகிச்சை பெறுகின்றனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

விபத்துடன் தொடர்புடைய பேருந்துகளின் சாரதிகள் இருவரும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயணி ஒருவரை ஏற்றுவதற்காக இலங்கை போக்குவரத்து சபை பேருந்து வீதியில் நிறுத்தப்பட்ட நிலையில் பின்னால் வேகமாக வந்த தனியார் பேருந்து மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-20)

## நிதியுதவி கிடைக்காததால் சீரமைக்கப்படாத வீடுகள்!

### முல்லை. மக்கள் கவலை

முல்லைத்தீவு, ஜன.24

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் போர்க் காலத்தில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கான நிதி உதவிகள் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் நடைபெற்றபோது சேதமடைந்த வீடுகளுக்கான நிதி உதவிகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போதுவரை நிதி உதவிகள் கிடைக்காததன் காரணமாக வீடுகளைப் புனரமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ப-13)



## உடைமையில் ஹெரோயின் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன.24

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

24 வயதான சந்தேகநபர் சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 2.5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)

## குளவி கொட்டி மூவர் பாதிப்பு

கிளிநொச்சி, பூநகரி, முக்கொம்பனில் குளவித் தாக்குதலுக்குள்ளான மூன்று பேர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முக்கொம்பன் மகா வித்தியாலய சூழலில் குளவிக் கூடுகள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றை அழிப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மாதர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ப-13)

## வடதாரகை திருத்தப்பணியை துரிதப்படுத்துமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

வடதாரகை படகின் திருத்தப் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

குறிகாட்டுவான் - நெடுந்தீவு பயணிகள் சேவையில் ஈடுபடும் வடதாரகை படகு திருத்தப் பணிகளுக்காக காங்கேசன்துறை கடற்படைமுகாமில் நிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெறவுள்ளது. வழமையாக கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்துக்கு வடதாரகை சேவையில் ஈடுபடும் நிலையில் இம்முறை வடதாரகை பயணிகள் சேவையில் ஈடுபடுவது அவசியம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதையடுத்தே படகின் திருத்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் பணித்துள்ளார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிராக மனுக்கள்

கொழும்பு, ஜன.24

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிராக 6 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்துள்ளார்.

நுண்கடன் மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டவரைவுக்கு எதிராக 2 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சபாநாயகர்சபைக்கு அறிவித்துள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமர்விலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 121 (1) சரத்துக்கு அமைய உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் பிரதிகள் கிடைத்துள்ளன.

நுண்கடன் மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டவரைவுக்கு எதிராக அரசமைப்பின் 121 (1) சரத்துக்கு அமைய உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் பிரதிகளும் கிடைத்துள்ளன என்று சபாநாயகர் தெரிவித்தார். (ஏ-இ)



# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் பேச்சுச் சுதந்திரத்துக்கான 'அடி'

## எச்சரிக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

**கொழும்பு, ஜன.24**

**நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் மக்களின் பேச்சுச் சுதந்திரத்துக்குப் பெரும் அடியாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.**

சமூக ஊடகங்களில் பெண்கள், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே இந்தச் சட்டத்தின் நோக்கங்களில் ஒன்று என அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆனால் அந்தச் சட்டவரைவில் பெண்கள், சிறுவர்கள் என்ற வார்த்தையே இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் பொலிஸார் நீதிமன்ற உத்தரவின்றி பத்திரிகையாளர்கள் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் கைபேசிகளை பறிமுதல் செய்யமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டவரைவு அரசாங்கத்தை மேலும் அதிகளவு எதேச்சதிகாரத் தன்மை வாய்ந்ததாக மாற்றும். மக்களின் உரிமைகளுக்கு இது எதிரானது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்தவுள்ள பேராபத்து

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் பிரபல சமூக ஊடக நிறுவனங்கள் இலங்கையுடனான ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல்களைத் துண்டிக்கும் ஆபத்து உருவாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டதும் இலங்கை சமூக ஊடகங்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கான தனது சொந்த சட்டப்பொறிமுறைகளைக் கொண்டிருக்கும். அதனால் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பொறிமுறைகளை பயன்படுத்தவேண்டிய தேவையேற்படாது.

அதனால் மெட்டா, யூரியூப் போன்ற பிரபல நிறுவனங்களும், ஆசிய இணையக் கூட்டமைப்பின் ஏனைய நிறுவனங்களும் இலங்கை அரசாங்கத்தின் கட்டமைப்புகளுடனான தங்கள் விசேட தொடர்பாடல்கள் ஒத்துழைப்புகளை நிறுத்தக்கூடும் என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

# 17 மாதங்களில் 18 பயணங்கள்

கொழும்பு, ஜன.24

வங்குரோத்து அடைந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக பதவிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 17 மாதங்களில் 18 முறை வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டு மக்களின் துன்ப, துயரங்களை கவனத்தில் கொள்ளாது நாட்டின் தலைவர் மக்களின் பணத்தில் வெளிநாடு செல்கிறார். வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இந்தப் பயணங்களுக்கு போதவில்லை என்பதால், மேலும் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# உயரவுள்ள பணவீக்கம்

கொழும்பு, ஜன.24

இந்த மாதம் இலங்கையின் பணவீக்கம் 7 வீதமாக உயரக்கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார்.

பெறுமதிசேர் வரி அதிகரிப்பு மற்றும் ஏனைய வெளிப்புறக் காரணிகளால் பணவீக்கம் இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் கூறினார். (ஏ-இ)

# மறைமுக நிகழ்ச்சிநிரல் யுக்தியவில் கிடையாது!

## பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

'யுக்திய' நடவடிக்கையைத் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் முன்னெடுக்கவில்லை என பதில்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

'யுக்திய'வில் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரல் எதுவுமில்லை பாதாள உலகத்தினரை அழிப்பது போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைதுசெய்வது மாத்திரமே கவனம் செலுத்தப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

'யுக்திய' நடவடிக்கையின்போது துன்புறுத்தல்கள் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டை நிராகரித்துள்ள அவர் பாதாள உலகத்தினருக்கு எதிரான உறுதியான கரமொன்று அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# புதினம் தெரியுமோ?

**வெ**ள்ளம் வந்த பிறகு அணை கட்டுறது தானே எங்கட வழக்கம். அப்பிடி அணைகட்டேக் கையும் எங்கட உடம்பு நோகாமல் அடுத்தவையின்ர தலையில அணைகட்டிற வேலையைப் போடுறது சிலருக்கு ஒரு பொழுதுபோக்கு மாதிரி. வலிகாமம் வலயத்தில இருக்கிற ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில, போனவருசம் ஏப்ரல் மாசம் 15 வயதுக்கு மேற்பட்ட பிள்ளையள் எல்லாரும் நஷனல் ஐ.சி. எடுக்கிறதுக்காக போட்டோவும் எடுத்து, சில 'டொக்கிமென்ட்ஸும்' கொண்டு வரவேணும் எண்டு பள்ளிக்கூடக்காரர் அறிவிச்சிருக்கினம். உடனேயே 15 வயதுக்கு மேற்பட்ட பிள்ளையள் 120 பேர் ஸ்ரூடியோவில போய் போட்டோ எடுத்துப் போட்டு, 'டொக்கிமென்ட்ஸைக்' கொண்டந்து குடுத்திருக்கினம். இந்த டொக்கிமென்ட்ஸோட ஒவ்வொரு பிள்ளையிட்டையும் 500 ரூபாவும் வாங்கியிருக்கினம். ஆனால் தபால் செலவையும் சேர்த்து ஒரு பிள்ளைக்கு ஐ.சி. க்கு அனுப்ப 310 ரூபாதான் முடியும். மிச்சம் 190 ரூபா பிள்ளையளிட்ட கணக்கில போட்டிட்டினம் போல.

பிள்ளையளிட்ட 'டொக்கிமென்ட்ஸையும்' காசையும் வாங்கினால் அந்த அலுவலைச் செய்து முடிச்சிருக்கவெல்லோ வேணும். ஏனெண்டால் இப்ப ஐடென்டி கார்ட் எடுக்கோணுமெண்டால், எல்லா இடத்திலையும் போட்டோ எடுக்க முடியாது. அரசாங்கம் அனுமதி குடுத்த ஸ்ரூடியோக்களில மட்டும்தான் எடுக்கலாம். அதுவும் அப்பிடி எடுத்த போட்டோ 6 மாதம் தான் செல்லுபடியாகும். பிந்தினால் புதிசா எடுக்கோணும். அதைமாதிரித்தான் 'பேர்த் சேர்ட்டிபிக்கெட்டும்'. அதுவும் பிரதேச செயலகத்தில கொப்பி எடுத்தால் ஆறுமாதம் தான் பாவிக்கலாம். இதெல்லாம் ஒவ்வொரு வருசமும் ஐடென்டி கார்ட்டுக்கு விண்ணப்பம் அனுப்பிற பள்ளிக்கூடங்களுக்கு அத்துப்படியான விசயங்கள். அப்பிடி இருந்தும், உந்தப் பள்ளிக்கூடக்காரர் வேற ஏதோ பிராக்கில, ஐடென்டி கார்ட்டுக்கு அனுப்பாமல் விட்டிட்டினம். இப்ப 9 மாதம் கழிச்சுத்தான் அவைக்குத் திடீரெண்டு பிள்ளையளுக்கு ஐடென்டிகார்ட்டுக்கு அனுப்பேலை எண்ட விசயம் நினைவுவந்திருக்குது. ஆனால் பிள்ளையளிட்ட முதலே வாங்கின 'டொக்கிமென்ட்ஸ்' ஆறுமாதம் கழிஞ்சதால, அதை அனுப்ப ஏலாத நிலைமை. அதைமாதிரி போட்டோ எடுத்தும் ஆறுமாதத்துக்கு மேல எண்டதால, அதுவும் புதிசா எடுத்தால் தான் அனுப்பலாம்.

தங்கட அக்கறையில்லாத்தனத்தால இப்பிடி நடந்திட்டுதே எண்ட குற்ற உணர்ச்சி கொஞ்சமும் இல்லாமல், இந்த லீவுக்காலத்தில திரும்பவும் படமெடுத்து, 'டொக்கிமென்ட்ஸும்' புதிசா எடுத்துக் கொண்டரச் சொல்லி வைபர்ல வொய்ஸ் மெசெஜ் ஒண்டு பெற்றாருக்கு பள்ளிக்கூடக்காரர் அனுப்பியிருக்கினமாம். இப்ப பள்ளிக்கூடக்காரர் விட்ட பிழையால திரும்ப போட்டோவுக்கு நானூறு ரூபா, பேர்த் சேர்ட்டிபிக்கெட்டுக்கு 120 ரூபா எண்டு திரும்பவும் ஐநூறு ரூபாவுக்கு மேல எல்லாப் பிள்ளையளும் செலவழிக்கோணும். இப்பிடி ஒரு பொறுப்பான வேலையை உரிய காலத்துக்க செய்ய முடியாமல், ஏமலாந்திப் போட்டு, இப்ப திரும்பவும் பிள்ளையளை வதைக்கிறது எந்த விதத்தில நியாயம்?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷவிரதம்

யாழ்ப்பாணம், ஜன.24

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ண காம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை வியாழக் கிழமை மாலை 5.30 மணிக்கு சஹஸ்ர நாம அர்ச் சனை இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப)

# அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.24

நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபப் புனரமைப்பு அங்குரார்ப்பணநிகழ்வுஎன்பனநாளைவியாழக்கிழமை காலை 10 மணிக்கு மன்ற வளாகத்தில் இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இளங்கலைஞர் மன்ற நிர்வாக சபையினர் தெரிவித் துள்ளனர். (ப-66)

# மணவாளக்கோல திருவிழா

நீர்வேலி, ஜன.24

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் மண வாளக்கோலத் திருவிழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கலியுகவரதன் கந்தப்பெருமானுக்கு சங்குகளினாலும், விநாயகர், பார்வதி, பரமேஸ்வரன், சிவகாமசுந்தரி, நடே சப்பெருமான், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, ஆறுமுக சுவாமி, லட்சுமி நாராயணப் பெருமான், வைரவசுவாமி மூர்த்திகளுக்கும் அபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து மதியம் அன்னதானம், மாலை 5 மணிக்கு விசேட பூசையும், கந்தப் பெருமான் வீதி வலமும் இடம் பெறவுள்ளது. (ப)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.24

வட்டுக்கோட்டை, அடைக்கலம் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி திருக்கோவில் கும்பாபிஷேக தின மணவாளக்கோல நவோத்ர சகஸ்ர மகா சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு திருக் கல்யாண உற்சவம் இடம்பெறும். (ப)

# சிறப்புச்சொற்பொழிவு

நீர்வேலி, ஜன.24

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசு வாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சுக்கிர வாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண் முக விலாச மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவ நெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற வுள்ளது.

கலாநிதி சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் சிறப்புச்சொற்பொழிவினையும், தேவஸ் தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமி ஆசியுரையையும் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர் களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ப)

விரைவில்

# ‘வற்’ விலக்குப் பொருள்கள்; தீர்வையற்ற விற்பனைக்கூடம்

கொழும்பு, ஜன. 24

**‘வற்’ அறவிடாமல் நுகர்வோர் பொருள்களை விற்பனை செய்வதற்காக நாடு முழுவதும் தீர்வையற்ற விற்பனைக்கூடங்களை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து நுகர்வுப் பொருள்களும் ‘வற்’ வரிக்குத் தகுதியானவை என மக்கள் மத்தியில் தவறான கருத்து நிலவுகிறது. அதுவே விலையுயர்வுக்குக் காரணம்.

அதன்படி ‘வற்’ நீக்கப் பொருள்களான காய்கறிகள், அரிசி, பால்மா உள்ளிட்டவற்றுக்காக நாடுமுழுவதும் விற்பனை வலையமைப்பை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# திறப்புவிழா

தெல்லிப்பழை, ஜன.24

தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவமனையில் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட முதியோர் இயல்பு வாழ்வு இல்லத்தின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை 25 ஆம் திகதி மாலை 4 மணிக்கு மருத்துவமனை வளாகத்தில் தெல்லிப் பழை கூட்டுறவு மருத்துவமனையின் தலைவர் ஆ.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நன்கொடையாளர் கணேசலிங்கம் தம்பதியர் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்ப ழைப் பிரதேச செயலாளர் திருமதி சுதீஸ்னர் சிவ கங்கா, வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு ஆகி யோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள் ளவுள்ளனர். (ப-66)

# குருபூசை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணம், சாவற்கட்டு, ஆனைக் கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு எதிர் வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சைவப்புலவர் செ. த. குமரன் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரி சில்கள் வழங்கப்படவுள்ளன. (ப-42)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம், பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். புதுவேலை அமையும்.

**மிதுனம்:** துணிச்சலாக சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**கடகம்:** மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**சிம்மம்:** அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். அதிக நற்பலன்களைப் பெறுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உடல் நலத்தில் கவனம் தேவை. லாபம் ஈட்டுவீர்கள்.

**துலாம்:** நீண்டநாள் விருப்பம் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

**விருச்சிகம் :** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உத்தியோகத்தில் நன்மதிப்பு பெறுவீர். சாதித்துக் காட்டும் நாள். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்:** எந்தக் காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கும்பம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**மீனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாமே நாட்டின் விவசாய மன்னர்கள்

விவசாயமே செய்யமுடியாதென்று கைவிட்ட நிலத்தில் கூட, தங்கள் கடினமுயற்சியால் பயிரிட்டு பொன்விளையும் பூமியாக்கியவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள். இப்படியெல்லாம் விவசாயத்தையே மூச்சாகக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தவர்களுக்கே 'விவசாயத்தை அபிவிருத்தி செய்யுங்கள்' என்று பிறர் அறிவுரை சொல்லும் நிலை வந்துவிட்டதுதான் வேதனையிலும் வேதனை. அந்த அறிவுரையைச் சொன்னவர் வேறு யாருமல்லர், இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் அந்த அறிவுரைக்குச் சொந்தக்காரர். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனியார் விருந்தகமொன்றில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இப்படிச் சொல்லிச் சென்றுள்ளார்.

நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா வந்திருந்தார். பலாலியிலும் வட்டுக்கோட்டையிலும் விவசாயத்தை ஜீவனோபாய தொழிலாகக் கொண்டிருந்த விவசாயிகளின் திறனைப் பார்த்து வியந்த சிறிமா, அந்த விவசாயிகள் பலருக்கும் விவசாய மன்னர் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்து விட்டுச் சென்றிருந்தார். 1970 - 76 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் விவசாய உற்பத்தியில் முதலிடம் வகித்தமை அனைவரும் அறிந்த ஒன்று. இந்தக் காலப்பகுதியில் அரச உயரதிகாரிகள் கூட வீட்டுதோட்டச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். குடிசைகளில் வாழ்ந்த யாழ்ப்பாண விவசாயிகள் சிறிமாவின் ஆட்சியில் ஆடம்பரமான வீடுகளை கட்டுமளவுக்கு விவசாயத்தால் கைநிறைய உழைத்தார்கள். இந்தக் காலப்பகுதியில் கட்டப்பட்ட பல வீடுகளை சேதமடைந்த நிலையில் இன்றும் பலாலியைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் காண முடியும். இந்த வீடுகள் யாவும் தென்னிலங்கைக்கு வெங்காயமும் மிளகாயும் ஏற்றுமதி செய்ததால் கிடைத்த பணத்தில் கட்டப்பட்டவை.

ஆனால் இப்போது எப்படியிருக்கிறது யாழ்ப்பாணத்து விவசாயம்? பெரும்பாலான விவசாயநிலங்கள் கட்டடங்களால் விழுங்கப்பட்டுவிட்டன. இன்னும் ஒரு தொகுதி விவசாய நிலம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் படைத்தரப்பின் ஆக்கிரமிப்புக்குள் இருந்து மீளமுடியாது தவிக்கின்றது. எஞ்சிய நிலத்திலும் விவசாயம் செய்வோர் எண்ணிக்கை மிகக்குறைவே. தோட்டங்களில் வேலை செய்யும் ஆளணிக்குப் பெருந்தட்டுப்பாடு. இங்கு விவசாயம் செய்வது இழுக்கென்று கருதிய இளையோர் கூட்டம், புலம்பெயர்ந்து சென்று அங்கு கழிப்பறைகளைச் சுத்தம் செய்வதையும், பிறரின் சாப்பாட்டுக் கோப்பைகளைக் கழுவுவதையும் பெருமையாகக் கருதுவதால், விவசாயம் இப்போது சீண்டுவாரற்ற துறையாக மாறி வருகின்றது. முன்னர் இங்கிருந்து எவையெல்லாம் ஏற்றுமதியாகினவோ, அதே விவசாயப் பொருள்களை இறக்குமதி செய்யும் நிலைக்கு வந்துவிட்டோம்.

வெங்காயம், செத்தல்மிளகாய். மரக்கறிகள் என எல்லாமே தென்னிலைங்கையில் இருந்து தாராளமாக இங்குவரத் தொடங்கிவிட்டன. 'சகல தம்புள்ள மரக்கறிகளும் மலிவான விலையில் பெற்றுகொள்ளலாம்' என்ற விளம்பர வாசகங்களை யாழ்ப்பாண நகர்ப்பகுதியிலுள்ள மரக்கறி விற்பனை நிலையங்களில் சர்வசாதாரணமாகக் காணமுடியும். இவற்றைக் கொள்வனவு செய்யும்போதெல்லாம், எங்கள் பணம் வெளியார் கைகளுக்குச் செல்கின்றது. பொருளாதாரம் நலிகின்றது. அபிவிருத்தி பின்னடைகின்றது. அதனாலேயே விவசாயத்தைக் கரைத்துக் குடித்த யாழ்ப்பாணத்தவர்களுக்கே ரணில் போன்றவர்கள் "விவசாயத்தால் அபிவிருத்தி அடையுங்கள்" என்று வழிகாட்டவேண்டிய அபத்தநிலை. எங்கள் மண்ணினதும், உழைப்பினதும் அருமை வெளியாருக்கு நன்கு தெரிகிறது, ஆனால் நாம் மட்டும் அதனை உணர மறுக்கின்றோம்.

விவசாயத்தால் பணத்தை முன்னர் போல உழைக்க முடியாது என்பதெல்லாம் கட்டுக்கதைகள். இப்போதுள்ள மரக்கறிவிலையில், அவற்றைப் பயிரிட்டிருந்த விவசாயிகள் கைநிறையக் காசு பார்த்திருக்க முடியுமே. இனியாவது எங்கள் மண் வளத்தையும், எங்களின் உழைப்பையும் முதலிட்டு மீண்டும் நாம் விவசாய மன்னர்களாக மாறுவதையே நம்மிடம் நாடும், காலமும் எதிர்பார்க்கின்றன.



## இலங்கை எதிர்கொள்ளும் தொற்றாநோய் அச்சுறுத்தல்

**கொழும்பு, ஜன.24**

**தொற்றாநோய் தொடர்பில் இலங்கை பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. 20 வீதத்துக்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தெற்காசியப் பிராந்தியத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவில் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உள்ள நாடாகவும் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. உயர் இரத்த அழுத்தம் தொடர்பான சிக்கல்களில் இருதயநோய் மற்றும் பக்கவாதம் போன்ற பல நோய்கள் அடங்குகின்றன.
வேகமாக முதுமையடையும் மக்கள்தொகை கொண்ட நாடென்ற வகையில், நினைவாற்றல் குறைபாடு, கண் நோய்கள், எலும்பு நோய்கள் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன.
தொற்றா நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

## கடவுச்சீட்டு பெறுவோர் வீழ்ச்சி

கொழும்பு. ஜன.24
2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு கடவுச்சீட்டு பெற்றவர்களின் எண்ணிக்கை 6.9 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
2022ஆம் ஆண்டு நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளும் நோக்குடன் 9 இலட்சத்து 11 ஆயிரத்து 757 பேர் கடவுச்சீட்டு பெற்றுள்ளனர். 2023 ஆம் ஆண்டு 8 இலட்சத்து 49 ஆயிரத்து 249 பேர் மட்டுமே கடவுச்சீட்டு பெற்றுள்ளனர். (எ-6)

## நாடுதிரும்பினார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு. ஜன.24
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை நாடு திரும்பியுள்ளார். (எ-இ)

## வட்டி வீதங்களில் மாற்றமில்லை

கொழும்பு, ஜன.24
இலங்கை மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை தற்போதைய மட்டத்திலேயே தொடர்ந்து பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது.
நேற்றுமுன்தினம் நடந்த இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை மீளாய்வுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (எ-இ)

## 91 வீத குழந்தைகளுக்கு தட்டம்மைத் தடுப்பூசி!

91 வீத குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.
ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதே இந்த ஆண்டின் முக்கியமான எதிர்பார்ப்பாகும். ஆரம்ப சுகாதாரச் சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு மிகவும் தரமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (எ-இ)

### நாளை

25.01.2024
**வியாழக்கிழமை**
**தை 11**
தைப்பூசம்
சுபநேரம் : 08.06 - 09.36
ராகுகாலம் : 02.06 -03.36

### நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு நாளையும் அறுவடைக்கான நாளென்று மதிப்பிடாதீர்கள், ஒவ்வொரு நாளும் விதைப்பதற்கான நாளென்று எண்ணுங்கள்.
- ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு இணுவில் கந்தசுவாமிகோயில்

# தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா





**காலம்: நாளை (25.01.2024) வியாழக்கிழமை**

**நேரம்: காலை 6.00மணிக்கு பால்குடப்பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பம்**

**குறிப்பு:** யாழ். குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் இருந்தும் பெரும்தொகையான பக்தர்கள் சென்ற வருடம்போல் முருகப்பெருமானுக்கு பால்குடம் எடுப்பார்கள் என எதிர்பார்ப்பதனால் பால்குடத்திற்குரிய அனைத்து பொருட்களும் ஆலயத்தினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மாபெரும்பொங்கல்

**காலை 9.00 - மாலை 3.00 மணி வரை ஆலயத்திற்குச் சொந்தமான வயலில் இருந்து மாட்டு வண்டிலில் புதிர் எடுத்துவரப்பட்டு புத்தரிசி ஆக்கி பாரம்பரிய முறைப்படி பொங்கல் ஆரம்பமாகும்.**

**குறிப்பு:** தொலைவில் இருந்து வரும் முருகன் அடியவர்கள் வசதி கருதி பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **வெண்பொங்கல் பொதி - 1200/-, சர்க்கரைப் பொங்கல் பொதி - 2000/-**

காலை 9.00 மணி தொடக்கம் 1008 சங்காபிஷேகம், சண்முகர்ச்சனை, விசேட பூஜை, அர்ச்சனைகள், இசை நிகழ்ச்சிகள், அன்னதானம் வழிபாடுகள் நடைபெறும்.

**மாலை:-** 6 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, 6.30 மணிக்கு முருகப் பொருமானாலே விரும்பி அமைக்கப்பட்ட நூற்றாண்டு பழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் சண்முகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் வீதி வலம் வரும் நிகழ்வும் புகழ்பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்களின் இசையுடன் தமிழர்களின் பெருமைசொல்லும் பாரம்பரிய கலை நடன நிகழ்வுகளான கரகம், இனியம் (பொம்மை, மான், மயில், குதிரை) ஆட்டங்களும் தீப்பந்தம், சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை, பரதநாட்டியம், பறை, உடுக்கு, தம்பு, மிருதங்கம் இசை நிகழ்வுகளும் இடம்பெறும்.

**முருகன் அடியவர்கள் அனைவரும் வந்து பால்குடம் எடுத்தும் பொங்கல் பொங்கியும் அர்ச்சனை வழிபாடுகளில் ஈடுபட்டும் உலகப் பெருமஞ்ச வடம் தொட்டு இழுக்கும் தைப்பூச நன்நாளில் தாங்கள் வேண்டும் வரங்கள் அனைத்தையும் முருகப் பெருமானிடம் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நிர்வாக சபையினர்**
**இணுவில் கந்தசுவாமி கோயில்.**

★★★விளம்பர அனுசரணையாளர்கள்★★★

KRS
food products
கே.கே.எஸ். வீதி கோண்டாவில்

KATYU
Roup

அக்ஷய
food city

குமரன் காட்வெயர்
கட்டடப் பொருள்
விற்பனையாளர்
கந்த சுவாமி கோயிலடி இணுவில்
077 400 2263
077 175 4667

ஐங்கரன் வெதுப்பகம்
இணுவில் தெற்கு
பாண், பிஸ்கட், கேக் வகைகள் செய்து கொடுக்கப்படும்.
077 302 7824

கணேசன்
ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ்.
இணுவில் சந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச திணைக்களங்களுக்கு திறைசேரி கடும் கட்டுப்பாடு

**கொழும்பு, ஜன.24**

**2024 வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக திறைசேரி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் சம்பளங்கள், பயிற்சிகள், வெளிநாட்டு பிரயாணங்கள், வாகனங்கள், திட்ட அமுலாக்கம், கட்டட வாடகை, போக்குவரத்து கொடுப்பனவு என்பன தொடர்பில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.**

திறைசேரியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்கூட்டியே அனுமதி பெறாத எந்த கொடுப்பனவுகளுக்கும் திறைசேரி பொறுப்பேற்கமாட்டாது. மேலதிக கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்துக்கு கூடுதலாக இருக்கக்கூடாது.

கூட்டங்கள், மகாநாடுகள், பயிற்சிப்பட்டறைகள் யாவும் நிகழ்நிலையிலேயே நடத்தப்பட வேண்டும். வெ ளிக்கள உத்தியோகத்தர்களின் செலவீனங்கள் குறைக்கப்பட வேண்டும். வழமையான கடமைக்கு செல்லும் உத்தியோகத்தர்களுக்கு ரயில் ஆணைச்சீட்டு, பஸ் பருவகாலச் சீட்டு என்பன வழங்கப்பட மாட்டாது. மின்சாரம், தண்ணீர், தொலைபேசி, எழுதுகருவிகள் போன்றவற்றுக்கான செலவீனங்கள் குறைக்கப்பட வேண்டும். கலண்டர்கள், நாட்குறிப்புகள், அழைப்பிதழ்கள், வாழ்த்து மடல்கள் என்பவற்றை அரச செலவில் அச்சிட முடியாது. காகிதாதிகளை வீண்விரயம் செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். பெறுமதி கூடிய கடித்ததலைப்புகள்,கடித உறைகள், கோவைகள் என்பன கொள்வனவு செய்வது தவிர்க்கப்பட வேண்டும். இவற்றுக்கு பதிலாக இலத்திரனியல் முறையை நடைமுறைப்படுத்தலாம். எரிபொருள் செலவை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அலுவலகப் பாவனைக்கு என வாகனங்களை ஒதுக்கி வைத்திருப்பது நிறுத்தப்பட வேண்டும்.


வாகனம் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒரேயொரு வாகனம் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும். வாகனம் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அலுவலக வாகனத்தை பாவிக்க முடியாது.

திறைசேரியின் அனுமதியின்றி வாடகை அடிப்படையிலோ குத்தகைக்கோ வாகனங்களை பெற்றுக்கொள்ள முடியாது. அரச அலுவலகங்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்ய முடியாது.

பயிற்சி நெறிகளுக்கு உள்ளூர் நிறுவனங்களே தெரிவு செய்யப்பட வேண்டும். அதுவும் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்த பயிற்சி நெறி அவசியம் எனக் கூறப்பட்டால் மட்டும். விடுதிகளில் பயிற்சி நெறிகளை நடத்த முடியாது.

வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியில் நடைபெறும் பயிற்சிகள் தவிர்ந்த வெளிநாட்டு சுற்றுலாக்கள், கருத்தரங்குகள், மாநாடுகளில் பங்கேற்றல் கல்விச் சுற்றுலாக்கள் என்பன நிறுத்தப்பட்டுள்ளன. திறைசேரியின் அனுமதியின்றி கட்டடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ள முடியாது.

திறப்பு விழாக்கள், ஒன்று கூடல்கள்,கண்காட்சிகள், மாநாடுகள் எ ன்பவற்றுக்கு அரச நிதியை செலவிட முடியாது. இவ்வாறு திறைசேரியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள புதிய சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-6)



# கெஹலியவுக்கு எதிராகக் கடிதம்

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை சுற்றாடல் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கி சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்காக மருத்துவ சங்கம் உள்ளிட்ட பல தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் குழு இந்தக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்துள்ளது. தரமற்ற இம்னோகுளோபுலின் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்ட விவகா ரத்தில் முன்னாள் சுகாதார அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல மீது குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. (எ-இ)

உ
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



## யாழ்ப்பாணம் - இருபாலை வேளாதோப்பு
## ஸ்ரீ மதுரை மஹாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான
## புனராவர்த்தன அஷ்டபந்தன
## நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா
## மஹா கும்பாபிஷேக பெரும்சாந்தி
## பெருவிழா - 2024

**நிகழும் சோபகிருது வருஷம் தைத்திங்கள் 10 ம் நாள் (24.01.2024)**
**காலை 09.38 மணிமுதல் முற்பகல் 11.15 மணிவரையுள்ள**
**மீனலக்ன சுபமுகூர்த்தவேளையில்**

**அம்பிகை அடியார்களே!**

இந்து சமுத்திரத்தின் முத்தென திகழும் லங்கா தீவின் சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்டதும் வடபால் யாழ்ப்பாணத்தின் இராசதானியாக விளங்கிய நல்லூரின் அருகே யாழ்ப்பாணம் இருபாலை வேளாதோப்பு பகுதியில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை வழங்கும் அன்னை ஸ்ரீ மதுரை மஹா முத்துமாரி அம்பாளுக்கு நிகழும் சோபகிருது வருடம் தைத்திங்கள் **10 ம் (24.01.2024)** புதன்கிழமையன்று புனர்பூச நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் சித்தயோகமும் சாத்வீகக்குணமும் சந்திரஹோரையும் கூடிய **காலை 9.38 மணிமுதல் 11.15 மணிவரையுள்ள** மீனலக்ன சுபமுகூர்த்த வேளையில் **அம்பிகை முத்துமாரிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம்** இடம்பெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அனைத்து அடியார்களும் அம்பிகையின் கும்பாபிஷேகத்திலும் அதற்கு முதல் இடம்பெறும் கிரிகைகளிலும் கலந்து அம்பிகையின் திருவருளை பெறுவீர்களாக.

## மஹா கும்பாபிஷேகம்
**24.01.2024 புதன்கிழமை காலை 09.38 மணிமுதல் 11.15.மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.**

**நிர்வாக சபையினர்**

விளம்பர அனுசரணை
**கணேசா பெயின்ட் அன் எலற்றிக்கல்ஸ்**
இல.87, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
**T.P: 76 536 7814**
(cs 53637) (N.1)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் 2024.01.27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறும்.

சகல கிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ.இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|
| 01 | நல்லூர் | யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க தலைமை அலுவலகம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் | கனகரத்தினம் திசாகரன் |
| 02 | கோப்பாய் | கந்தசாமி கோவிலடி சனசமூக நிலையம் மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் | சபாரத்தினம் அருள்நாதன் |
| 03 | உடுவில் | யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் மானிப்பாய் வீதி, மருதனார்மடம். | சற்குணசிங்கம் பிரேமிலன் |
| 04 | சங்கானை | சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகம், சித்தங்கேணி | இராசரத்தினம் வேல்குமார் |
| 05 | சண்டிலிப்பாய் | மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகம், பொன்னாலை வீதி, மானிப்பாய் | பரமசிவம் தவப்பிரியன் |
| 06 | தென்மராட்சி | சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், கண்டி வீதி, சாவகச்சேரி | கனகரத்தினம் வட்சன் |
| 07 | யாழ்ப்பாணம் | கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் | இராஜசிவம் தனுசன் |
| 08 | தெல்லிப்பழை | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அளவெட்டிக் கிளைநிலையம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி | செகராசா பகீரதன் |
| 09 | காரைநகர் | காரைநகர் ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், சுற்று வீதி, காரைநகர் | இரத்தினராசா கஜந்தன் |

**மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி**
**உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**857, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**2024.01.23**

**ஒப்பம்: கிறகோரி சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி**
**உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(ст.41608) N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
28
12
1982



இறப்பு
23
01
2024

## அமரர் திருநாவுக்கரசு கார்த்திகேயன்

**ஐயனார் கலட்டி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், 2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம்,பருத்தித்துறை) 23.01.2023 அன்று காலமானார்.**

அன்னார் தமயந்தியின் அன்புக் கணவரும், சாகித்தியா, இலக்கியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திரு.திருமதி திருநாவுக்கரசு புவனேஸ்வரி அவர்களது கனிஸ்ர புத்திரனும், திரு.பார்த்தீபன் (பிரதேச வைத்தியசாலை -அச்சுவேலி) கார்திகா (மாநகரசபை - கொழும்பு) திரு.தி.பகீரதன் (கப்பிற்றல் மகாராஜா- கொழும்பு) ஆகியோரது அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பேராசிரியர் சிவத்தம்பி அவர்களது மருமகனும், கேசவன் (மேர்க்கன்ரைல்), சுபேந்தினி (மக்கள் வங்கி- வவுனியா) ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

**அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று (24.01.2024) காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 27761) V-1

# விலை மனுக்கோரல் (IFB)

**கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம் திணைக்களப் பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினை பெற்றுக்கொள்ளல் - 2024**

**கேள்வி கோரல் இல:- NP/23/1/2/4/V.hir/2024**

1. யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலக பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரரிடமிருந்து வடமாகாணக் கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரால் (திணைக்கள பிரதான பெறுகைக்குழு) கோரப்படுகின்றது.
2. வாடகை அடிப்படையில் 2014ஆம் ஆண்டு மாசி மாதம் 11ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வாகனம் ஒன்றினை (Passenger Van with Dual A/C) பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான (NCB) நடைமுறையின் பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்திணைப் பெறுவதற்கான தகுதியான மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம் பெறாதவராகவும் ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் பகுதி 2 இல் கேள்வி கோரலுக்கான தரவுத்தாளில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விலை மனுக்களை அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை பரிசீலித்துப் பார்க்க முடியும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 29/01/2024 முதல் 10/02/2024 வரையான காலப்பகுதியில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.500.00இனை காசாக செலுத்தி மாகாணப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுப் பத்திரத்தினைப் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, குருநகர் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
7. கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் 05/02/2024 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு விலைமனுக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.
8. மூடிய விலைமனுக்கள் யாவும் 11.02.2024 அன்று பி.ப. 3.00மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் யாவும் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றினை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களுடனும் ரூபா.40,000.00ற்கான 09/05/2024 வரை செல்லுபடியாகும் வகையில் வங்கி உத்தரவாத பிணைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
மாகாணக் கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, குருநகர்,
தொலைபேசி இல:- 021-2228091**

**திகதி: 24.01.2024**

# மரண அறிவித்தல்

மலர்வு
01
09
1939



உதிர்வு
21
01
2024

## திருமதி கனகம்மா திருமுருகராஜா

(ஓய்வுநிலை பிரதம லிகிதர் ப.நோ.கூ.சங்கம்
யாழ்ப்பாணம் - சாவகச்சேரி)

தாழையடி அம்மன் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் 14, 3/4, 37 வது ஒழுங்கை, வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா திருமுருகராஜா அவர்கள் கடந்த 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருமுருகராஜா (ஓய்வுநிலை D.O.A. CTB - பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நாகமுத்து, நல்லம்மா, வேலாயும் (ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர்) அன்னப்பிள்ளை, மற்றும் வீரகத்திப்பிளளை (ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர், அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமலர்ராணி, திருமாங்களநாயகி, திருமோகனராதா, காலஞ்சென்ற திருமேனகாதேவி, திருமதிவதனா, திருமதனரூபி ஆகியோரின் மைத்துனியும், கௌரீசன் (கனடா), வாகீசன் (லண்டன்), கௌசல்யா (திறன் அபிவிருத்தி உத்தி யோகத்தர் - கொழும்பு), ஜயந்தீசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும், பவித்திரா, சுகன்யா, கிருஷ்ணகுமார் (சமூக சேவை உத்தியோகத்தர் - பத்தரமுல்லை), தமிழரசி ஆகியோரின் அன்பு மாமியாரும், திசான், ஹிரோசன், ஹர்சனா, பிரிஸ்னி, ருக்ஷயன், அஸ்விதா, சஞ்சயன், பாருஜன், கவிநயா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் மேற்கு, காந்தாழம்பட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாழையடி அம்மன் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**திருமுருகராஜா (கணவர்)**
**077 711 1493**
**கிருஷ்ணகுமார் (மருமகன்)**
**077 327 7328**

(C41615) N-1

# மரண அறிவித்தல்



## அமரர் நாகநாதன் திருநாவுக்கரசு (துரை)

**(சமாதான நீதவான், தர்மகர்த்தா சபை உறுப்பினர் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம், முன்னாள் கிளை முகாமையாளர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்கானை)**

மூளாயைப் பிறப்பிடமாகவும் மடத்தடி கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதன் திருநாவுக்கரசு (துரை) 22.01.2024 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதன் சிவனேசாம்பாள் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், சரஸ்வதி (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான முருகையா இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மங்கையற்கரசி, தவராணி காலஞ்சென்ற சிவநாதன்,மற்றும் கிருஸ்ணமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லம், பாலசுப்பிரமணியம்,மற்றும் பாக்கியம், காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிவா வீதி மூளாயில் உள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் இன்று (24.01.2024) காலை 10.30 மணியளவில் நடைபெற்று பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 844 8283**
**01 647 855 0441**

*தகவல்*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டு அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். 500 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் சட்டவிரோத மது உற்பத்தி, திருட்டு என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன.

அக்கராயன் பொலிஸ் நிலையத்துக்கு வந்த கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் உயரதிகாரியின் வாக்குறுதிப்படி ஒரு மாதம் பொலிஸ் சோதனைச் சாவடி இயங்கியது. தற்போது பொலிஸ் சோதனைச் சாவடி இயங்குவதில்லை.

வன்னேரிக்குளத்தில் அக்கராயன் பொலிஸார் நிரந்தரமாக பொலிஸ் சோதனைச் சாவடியை அமைக்க வேண்டும் என வன்னேரிக்குளம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை, ஜன.24

தெல்லிப்பழை,தரைமண்கலட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.48 மணி முதல் மு.ப. 10.23 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை 22 ஆம் திகதி காலை மகா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமான நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை 23 ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் நடைபெற்றது. (ப-66)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.24

ஊரெழு கிழக்கு, நாவலம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை திரவிய அபிஷேகம், 108 சங்காபிஷேகம், விசேட பூஜை, அர்ச்சனைகள்,அன்னதானம் என்பன நடைபெறவுள்ளன.

மாலை 6.30 மணிக்கு விசேட பூசை, இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, திருவூஞ்சல், தொடர்ந்து சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)



## பெப்ரவரி மாதத்தில் மின் கட்டண திருத்தம்

கொழும்பு, ஜன.24

எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ நேற்றுத் தெரிவித்தார். மின்சாரக் கட்டணத்தை திருத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கை இருக்கின்றது. அதற்கிணங்க மக்கள் கருத்துக் கணிப்புப் பெறும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் உள்ள மின்சார பாவனையாளர்கள் ஜனவரி மாதம் மின்சார கட்டணத்தில் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)




## மாணவர்கள் இணைப்பு; கல்வி அமைச்சின் அறிவிப்பு

கொழும்பு, ஜன.24

பாடசாலைகளில் முதலாம் தர மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வுள்ளன என்றும், அதிபர்கள் நேர்முகப் பரீட்சையின் பின்னர் மாணவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டும் 6ஆம் தரத்துக்கு மாணவர்களை இணைக்கும் செயற்பாடு நடைபெறும் என்றும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## போக்குவரத்துச் சேவை இல்லை; பூதன்வயல் மக்கள் நெருக்கடி!

**முல்லைத்தீவு,ஜன.24**

**முல்லைத்தீவு, கரைதுறைபற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் 211 குடும்பங்கள் வாழ்கின்ற பூதன் வயல் கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

முல்லைத்தீவு-குமுழமுனைக்கிடையிலான பேருந்துகளில் 2 கிலோ மீற்றர் தூரமும், மாணவர்கள் பாடசாலைக்கு 4 கிலோ மீற்றர் தூரமும் பயணிக்க வேண்டியுள்ளது. பொது மருத்துவமனைக்கும் செல்வதில் நெருக்கடி காணப்படுகின்றது. முல்லைத்தீவுக்கும் குமுழமுனைக்குமிடையில் காலை 6 மணிக்கு, நண்பகல் 12 மணிக்கு, பிற்பகல் 3 மணிக்கு, மாலை 6 மணிக்கு பேருந்துகள் பயணிக்கின்றபோதும்கிராமத்திலிருந்து பூதன்வயல் சந்தி வரை நடந்துவந்தே பேருந்துகளில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)

### பஸ்களில் அதிக கட்டணம்

பேருந்துக் கட்டணங்கள் அரசால் அதிகரிக்கப்படாத நிலையில் ஏ-9 வீதியில் தூர இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணச்சீட்டு வழங்காமல் நிர்ணயக் கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் அறவிடப்படுகின்றது என பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த விடயத்தில் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டுமென பயணிகள் தெரிவித்துள்ளனர். (ப-9)

## சந்நிதியில் தைப்பூசம்

யாழ்ப்பாணம், ஜன.24

செல்வச்சந்நிதி ஆலய சோபகிருது வருட தைப்பூச உற்சவம் நாளை நடைபெறவுள்ளது. பகல் சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு முருகப்பெருமான் வீதி வலம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படுமென நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப)

## தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.24

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் தைப்பூசத் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து இரவு 7 மணிக்கு முருகப்பெருமான் திருமஞ்சத்தில் வலம் வரும் நிகழ்வு இடம்பெறும். (ப-17)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜன,24

காங்கேசன்துறை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் கட்டடத் தொகுதியில் யாழ். சித்த மருத்துவமனைத் திறப்புவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மு.ப.10.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ப-66)

## கலைவிழா

சாவகச்சேரி ஜன. 24

சாவகச்சேரி, புவேந்தன் முன்பள்ளி நிலையத்தின் 27 ஆவது ஆண்டு கலைவிழா நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு சாவகச்சேரி, டச்சு வீதி, ஐங்கரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரையும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் முகாமையாளர் இ.ஜோ. இன்பராஜும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும், இந்த வருடம் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணையவுள்ள சிறார்களுக்குப் பரிசில் வழங்கலும் இடம்பெறும். (ப- 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.01.2024
புதன்கிழமை

# புதன் பொய்கை



"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

**பொருள்:** வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.
- வள்ளுவர்

# 21ஆம் நூற்றாண்டுக் கல்வியும் அதற்கான ஆசிரியத்துவம்

நடேசு தயாளன்

மாணவர்களின் வாழ்வில் ஆசிரியரது வகிபாகமானது கற்பித்தல் பணிக்கப்பாலும் நீண்டு செல்வதாகவுள்ளது. இன்றைய காலகட்டத்தில் கற்பித்தல் என்பது பல்பரிமாண முடையது என்பதோடு ஆசிரியர்கள் ஆலோசகர் சகபாடி வழிகாட்டுனர் முன்மாதிரியானவர் என்றவாறாகவுமுள்ளது.



ஜனநாயக சமூகத்தின் இதயமாகக் கல்வி விளங்குகின்றது. எனவே இளைய சமூகத்தினருக்கு ஆரோக்கியமான கல்வியை வழங்குவதன் மூலம் எதிர்கால சமூகத்துக்குப் பங்காற்றக் கூடிய உன்னதமான தனிநபர்களை உருவாக்க முடியும். அத்தகையவர்களை உருவாக்குவதில் பங்காற்றுவதற்கு வேண்டிய திறன்களை இன்றைய ஆசிரியர்களானவர்கள் கொண்டிருத்தல் அவசியமானதாகும். உலகில் மாற்றங்களானவை மிக வேகமாக நிகழ்ந்து வருகின்றன. இந்த மாற்றங்கள் சிக்கலானவையாகவும் பலமான சவாலுக்குட்பட்டவையாகவும் அமைந்துள்ளன. முன்னைய காலங்களிலும் பார்க்க இன்றைய காலச் சவால்களானவை மாறுபட்ட இயல்புடையதாகும். இலக்க (டியிற்றல்) உலகில் அனைத்து விடயங்களும் வேகமாக இடம்பெறும் இயல்புடையன. ஆதலால் இன்றைய உலகில் ஆசிரியர்கள் எவ்வாறு இதற்கு பொருந்திவாழப் பழக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

## 21ஆம் நூற்றாண்டுக்கல்வி

21ஆம் நூற்றாண்டுக் கல்வியானது பொருளாதார சமூக மாற்றங்களுக்குப் பங்காற்றும் கல்வியாகும். இங்கு கல்வியானது மாணவர்களுக்குத் தேவையான திறன்கள் மற்றும் தேர்ச்சிகளை வழங்குவதனூடாக சமூக வாழ்வில் வெற்றியடைந்தவர்களைத் தோற்றுவிக்க முயல்கின்றது. இந்தப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு 21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியரானவர் வாழ்நாள் முழுவதும் கற்பவராக, முன்மாதிரியான நடத்தையுடையவராக, ஆலோசகராக, வழிகாட்டியாக, பிரச்சினைகளைத் தீரப்பவராக தனது வகிபாகத்தினை மாற்ற வேண்டியவராகவுள்ளார்

மாற்றங்கள் சதாநிகழ்ந்த வண்ணமுள்ள இன்றைய உலகில் ஆசிரியர் வகிபாகமானது பல்பரிமாண நிலையுடையதாகவுள்ளமை நோக்குதற்குரியது. மாறும் உலகில் அறிவு என்பது வரையறையற்றதாகவுள்ளது ஆசிரியர்களானவர்கள் மாணவர்களுக்குக் கற்பிப்பதில் தொழில்நுட்பம் சார்ந்த திறனுடையவர்களாக மட்டுமன்றி அவர்களது கற்றலுக்கும் வகைகூற வேண்டியுமுள்ளது. இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்களானவர்கள் பன்முகத்தன்மை கொண்ட தனியாள்களை வகுப்பறையில் உருவாக்கும் ஆற்றலுடையவர்களாக விளங்க வேண்டும். ஆசிரியரானவர் மாணவர் மையக் கற்றலுக்கான கற்றற் சூழலை ஏற்படுத்துவதோடு கற்றலில் மேன்மை அடைவதற்கான விசாரணை மூலமான கற்றலுக்கு வாய்ப்பளிப்பவராகவும் விளங்குதல் வேண்டும். ஆசிரியர் கற்பிப்பதன் மூலம் பிள்ளையிடமுள்ள ஆற்றலினை மேலெளச் செய்வதனூடாக அவர்களது எதிர்கால இலக்குகளை அடைவதற்கு வழிகாட்டுகின்றார். ஏத்தகைய நவீன சாதனங்கள் கற்பித்தலில் உட்புகுத்தப்பட்டாலும் கல்விச் செயன்முறையில் ஆசிரியரானவர் இன்றியமையாதவராவார். இதன் காரணமாக ஆசிரியர் பற்றாக்குறையற்ற கல்வி உலகொன்று உருவாக்கப்படுதல் கட்டாயமானதாகும்

## எதிர்காலத்தை முன்னிறுத்துவது ஆசிரியத்துவத்துக்கு அவசியம்!

21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியரானவர் எதிர்காலத்தினை முன்நிறுத்திச் செயற்படுபவராக விளங்குவார். அவரிடம் எதிர்காலத் தொழில் உலகு தொடர்பான அறிவு காணப்படும் என்பதோடு எத்தகைய தொழில் நுட்பமானது கற்பித்தலுக்கு மிகவும் பொருத்தமானது என்பது தொடர்பான அறிவும் காணப்படும்.

மாற்றமடையும் சமூக வாழ்க்கை முறைகளும் கல்விக்கான சூழல்களும் ஆசிரியரது திறனில் அதிக தாக்கத்தினை உண்டுபண்ணுகின்றன. 21ஆம் நூற்றாண்டுக்கான கற்பித்தற் பணியில் ஈடுபடும் ஆசிரியரானவர் தன்னிடம் கற்போனிடம் பின்வரும் மாற்றங்களை ஏற்படுத்துபவராக விளங்க வேண்டும்.

1. உலகின் எப் பாகத்திலும் வாழ்வதற்கும் வேலை செய்வதற்குமான திறன்
2. தனது ஈடுபாட்டுக்கும் இயலுமைக்கு ஏற்ப மாற்றங்களை மேற்கொள்ளும் திறன்
3. உலகத் தொழிலாளர்களுடன் சேர்ந்தியங்கும் திறன்

கல்விச் செயன்முறையின் போது கலைத்திட்டத்தின் தரத்தினை நிலை நிறுத்தும் நோக்குடன் ஆக்கமலர்ச்சி ஆர்வ நிலை என்பவற்றுடன் ஊக்கப்படுத்தலையும் வழங்கக் கூடிய வகையில் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும். இதற்காகப் பாதுகாப்பான வகுப்பறைச் சூழலை ஏற்படுத்துவதோடு மாணவர்கள், மற்றும் ஆசிரியர்கள் பெற்றோருடன் சிறப்பார்ந்த உறவுக்கோலத்தினைக் ஆசிரியர் கட்டியெழுப்புவதும் அவசியமானதாகும். 21ஆம் நூற்றாண்டுக்கான ஸ்ரெம் வகுப்பறையின் பங்குதாரர்களான ஆசிரியரும் மாணவர்களும் இரண்டாம் நிலைக் கல்வியை வழங்குவதிலும் பெற்றுக் கொள்வதிலும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றார்கள். கல்வியியலாளர்கள் இதற்காக மாணவர் மையமான கற்பித்தலினை வலியுறுத்தும் அதேவேளை ஆசிரியர்களானவர்கள் பாரம்பரியமான கற்பித்தல் முறைகளில் இருந்து விடுபட்டு செயற்பட வேண்டும் என்பதும் அவர்களது எதிர்பார்ப்பாகும்.

வினைத்திறனான செயற்பாட்டு அமுலாக்கங்கள் மூலமே துறைகள் தொடர்பான தேவைப்பாடுகளை புரிந்துகொண்ட வகிபாகத்தினை உருவாக்கிக்கொள்ள முடியும். நவீன கற்பித்தல் முறைகளில் விசாரணை சார்ந்த அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் மாணவர்களது சுயமான செயன்முறைகளை ஊக்குவித்தல் அவசியமானதாகும். 21ஆம் நூற்றாண்டுக் கல்வியானது வெறுமனே விடயங்களைக் கற்பதல்ல திறன்களை விருத்தி செய்தலேயாகும். இந்தத் திறன்களானவை கற்போனை ஆளுமை மிக்கவனாக உருவாக்குவதுடன். சமூக உலகினுள் நுழைவதற்குத் துணை புரிவதாக இருக்கும்.

21ஆம் நூற்றாண்டுக் கல்வியானது மாணவர்களிடையே வினா எழுப்பும் திறனினை வளர்ப்பதாக சுதந்திரமான உணர்வுடன் தமது ஆர்வங்களுக்கான தேடலை மேற்கொள்பவர்களாக விளங்கச் செய்தல் என்பதோடு மாணவர்களானவர்கள் வரையறையற்ற வகையில் சிந்திப்பதற்குத் தூண்டப்பட வேண்டும் என்பதனை நோக்காகக் கொண்டது. பிள்ளைகளானவர்கள் மனவெழுச்சிகளை முகாமை செய்யும் திறனுடையவராகவும் ஏனையவர்களது மனவெழுச்சிகளை புரிந்து கொண்டு செயற்படுபவராகவும் பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்க்கும் திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும் என்பதோடு கலாசார பல்வகைமை புவி வெப்பமடைதல் தொடர்பில் எவ்வாறு நேரான பங்களிப்பினை வழங்கலாம் நிலைபேறான எதிர்காலத்துக்குப் பங்காற்றக்கூடிய உலகக் குடிமகனாக மிளிர என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுடையவராகவும் விளங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதால் இன்றையகால ஆசிரியர்கள் இதற்கான பயிற்சியினை வழங்குபவராகவும் விளங்க வேண்டும்.

மேம்பட்ட தொழில்நுட்பத் திறன்களைப் பயன்படுத்துவதனூடாக புதுமைகாணும் வகையிலான கற்பித்தல் அணுகு முறைகளைப் பின்பற்ற வேண்டும். இதன் மூலமே மேம்பட்ட கற்பித்தலினைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்த முடியும். புதிய தொழில் நுட்பங்களின் பயன்பாடானது கற்போனின் ஈடுபாட்டினை அதிகரிப்பதோடு ஊக்கப்படுத்தலையும் வழங்குவதாக இருக்க வேண்டும். பிள்ளைகளானவர்கள் புதிய கண்டுபிடிப்புக்களில் ஈடுபட வாய்ப்புக் கிடைக்கின்றது. இன்றைய உலகில் தொழில்நுட்பத்தின் பயன்பாடானது எமது நாளாந்தச் செயன்முறையில் ஒரு பகுதியாக மாறியுள்ள நிலையில் கல்வியுடன் தொழில்நுட்பம் அவசியமானதாகும். இங்கு கற்போன் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடும்போது கற்றல் இணைக்கப்படுதல் இலகுவானதாகவும் மகிழ்ச்சியுடையதாகவும் மாறும்.

மாணவர்களின் வாழ்வில் ஆசிரியரது வகிபாகமானது கற்பித்தல் பணிக்கப்பாலும் நீண்டு செல்வதாகவுள்ளது. இன்றைய காலகட்டத்தில் கற்பித்தல் என்பது பல்பரிமாணமுடையது என்பதோடு ஆசிரியர்கள் ஆலோசகர் சகபாடி வழிகாட்டுனர் முன்மாதிரியானவர் என்றவாறாகவுமுள்ளது. எனவே ஆசிரியர்கள் இதனை உணர்ந்து செயற்படுதல் அவசியமானதாகும். இதுவே அவர்களை சமூகத்தின் உயர்நிலைக் இட்டுச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளையதினம் தைப்பூசம் கொண்டாடப்படவுள்ள நிலையில் அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



# தைப்பூச நீராடலால் பொலிவுறும் உலகு

ஆ.இளங்கோ

தமிழர்களால் கொண்டாடப்பட்டுவரும் பல்வேறு கொண்டாட்டங்கள், பாரம்பரிய விழாக்களில் ஒன்றாகவே தைபூசவிழாவும் அமைகின்றது. தைப்பூசம் ஆண்டுதோறும் தை மாதம் (தமிழ் பஞ்சாங்கப்படி பத்தாவது மாதம்) பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிவரும் நன்நாளில் முருகனுக்கு எடுக்கப்படும் முக்கியமான விழாவாகவும் விளங்குகின்றது. இவ்வாண்டு ஜனவரி 25ஆம் திகதி அதாவது சோபகிருது வருடம் தை மாதம் பதினோராம் நாள் தைபூச நாளாக அமைகின்றது.

ஒவ்வொரு மாதத்தின் முழு நிலவு நாளும், அன்றைய நட்சத்திரமும் புனிதமாகக் கொண்டாடப்படுவது பண்டைய தமிழர் வழக்கம். அந்தந்த மாதத்தின் முழுநிலவு நாளின் நட்சத்திரத்தின் பெயரில் மாதம் அழைக்கப்படுகிறது. தை மாதத்தின் பெயர் பூச மாதம் எனவும் சொல்லப்படுகிறது. தொன்று தொட்டு தைப்பூசத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது சங்க இலக்கியத்திலேயே முருகன் வழிபாடு பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. சோழர்கள் காலத்து தைப்பூச விழாக்கள் பற்றிக்கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

தேவாரம் பாடிய மூவருள் அப்பரும், சம்பந்தரும் இந்தத் தைப்பூச விழாவை தங்கள் தேவாரப் பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

**'வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப் பொருந்திய தைப்பூசமாடி உலகம் பொலிவெய்த...'**

என்ற திருஞானசம்பந்த நாயனார் பாடிய தேவாரத்தின் மூலம் சுமார் ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னரே தைப்பூசம் கொண்டாடப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. மேலும் பூசத்துறை (தைமாதம்) பூசநாளிலே மருதவாணர் தீர்த்தமாடும் திருக்காவிரித்துறை என்பதனை,

**'பூசம் புகுந்தாடி பொலிந்தழ காய**
**ஈசனுறைகின்ற இடை மருதீதோ'**

எனத் திருஞான சம்பந்தப்பெருமான் தேவாரப் பதிகத்திலும் ஈசன் எம்பெருமான் திருவடியை வழிபட்டு வைகுதலைக் கண்டு, புனலாட யாமும் பூசத்திருநாளில் அங்குப் புகுந்து வழிபடுவோம் என்பதனை

**'ஈசனெம்பெரு மானிடை மருதினில்**
**பூச நாம்புகு தும்புன லாடவே'**

எனத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரப் பதிகத்திலும் காணக்கூடியனவாக உள்ளன.

திருஞானசம்பந்தரின் மயிலாப்பூர்ப் தேவாரப் பதிகத்தில் அரவம் தீண்டி உயிர்நீத்த பூம்பாவையை நோக்கி நெய்யொழுகும் சிறந்த பொங்கல் படைத்துக் கொண்டாடும் தைப்பூச விழாவைக் காணாது செல்வது முறையோ? என வினவுவதாகப் பாடியுள்ளார்.

**'நெய்ப் பூசும் ஒண் புழுக்கல்**
**நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்..'**

தைப்பூசநாளில் தான் பூம்பாவையை சம்பந்தர் தேவாரம் பாடி உயிர்பெறவைத்தார்.

## தைப்பூசத்தின் மகிமை

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை வெல்லமுடியாத நிலையில், தேவர்களுக்குப் பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்கவேண்டி சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டனர். கருணைக்கடலாம் சிவபெருமான், தேவர்களின் முறையீட்டை ஏற்று உருவாக்கிய அவதாரமே முருகன்.

சூரனை அழிக்கப் பார்வதி தன் சக்தி, ஆற்றல் அனைத்தையும் திரட்டி ஒன்று சேர்த்து வேலாக மாற்றி அந்தச் சக்தி வேலை முருகனுக்கு அளித்த அந்தநாளும் தைப்பூசநாளாகும். அந்த ஞான வேல் கொண்ட கந்தன் அசுரர்களை வதம் செய்து தேவர்களை காத்து அருளினார். இதனை நினைவு கூறும் தினமாகவே இந்த தைப்பூசம் கொண்டாடப்படுகின்றது.

பூச நாளில் 'வேலன் வெறியாட்டு' என்ற முருக வழிபாடு, ஆண், பெண் என்ற இருபாலாரும் வேல் பிடித்து ஆடிய செய்திகளை சங்கத் தமிழ் தகவல்கள் கூறுகின்றன. தைப்பூச நன்னாளில் வேல் வழிபாடு செய்வது மிகுந்த நன்மைகளை அளிக்கும்.



தைப்பூசம் அன்றுதான் உலகம் தோன்றியது எனவும், உலகத்தின் முதல் உயிர்ப்பு சக்தியான தண்ணீர், சிவனால் தோன்றியதெனவும், அதன் தொடர்ச்சியாக நிலம், ஆகாயம், நெருப்பு, காற்று ஆகியவையும், அடுத்தடுத்து அனைத்து உயிரினங்களும் தோற்றுவிக்கப்பட்டதென்றும் சில புராணங்கள் இந்நாளுக்குரிய சிறப்பைக் கூறுகின்றன.

இந்தவகையில் தைப்பூசம் மிகவும் சுபீட்சமான நாள் என்பது நம்பிக்கை. எனவே அன்று தொடங்கும் நல்ல காரியங்கள் எதுவானாலும் சிறந்த பலனைக் கொடுக்கும் என்பது தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையாக விளங்குகின்றது.

'தைப்பூசத் திருநாளில் தொட்டதெல்லாம் துலங்கும்' எனும் பழமொழிக்கேற்ப அன்றைய தினம் பெண் குழந்தைக்கு காது, மூக்கு குத்துதல், ஏடு தொடக்குதல், திருமணப் பேச்சுகள் ஆரம்பித்தல், ஒப்பந்தங்கள் செய்தல் போன்ற நற்செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## புதிர் எடுத்தல்

ஈழத்தமிழ்மக்கள் தைப்பூசத்தினத்தில்தான் புதிர் எடுக்கும் வைபவத்தையும் கொண்டாடுகின்றனர். வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்துவந்து அதனைக் குடும்பத்தலைவியிடம் கொடுத்து சுவாமி அறையில் வைப்பர். அதில் இருந்து சில நெல்மணிகளை அவர்கள் அரிசியாக்கி வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு ஆக்கி உண்ணும் வழக்கம் கொண்டவராகவும் உள்ளனர்.

தைப்பூசம் சிவபெருமானுக்கும், முருகப் பெருமானுக்கும் விசேஷமான தினமாகும். தைப்பூசம் அன்று அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு முருகனை வழிபட்டு விரதத்தை ஆரம்பித்தல் வேண்டும். "வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப் பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்த"என்ற தேவாரப் பதிகம்மூலம் உலகம் தைப்பூச நீராடலால் தோசங்கள் நீங்கி, பொலிவு பெறுகிறது என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

வீட்டில் விளக்குகளை ஏற்றிவைத்து முருகப்பெருமானை வழிபட்டு கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் அனுபூதி போன்ற முருகப்பெருமானுக்கு உகந்த பாடல்களை காலையில் இருந்து மாலை வரை படித்தல் காலை மற்றும் மதியம் ஆகிய வேளைகளில் மட்டும் பழங்களை உண்ணுதல் போன்றவாறு விரதத்தை கைக்கொள்ள வேண்டும். இவற்றைச் செய்யஇயலாதவர்கள் 'ஓம் சரவணபவா' என்ற மந்திரத்தை இடைவிடாது உச்சரித்து முருகனை நினைந்து வழிபடவேண்டும் எனவும் சொல்லப்படுகின்றது.

தைப்பூச நாளன்று முருகனை வழிபட்டு, விரதமிருந்து, காவடி எடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் எந்தவித தீய சக்திகளும், எம்மை நெருங்காது எனவும் வாழ்க்கையில் காணப்படுகின்ற பல்வேறு துன்பங்கள் அனைத்தும் அகன்று, ஆரோக்கியமான, வறுமையற்ற, நோயற்ற வாழ்வினையும் பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக் கிடைப்பதாகவும் கருதப்படுகின்றது.

ஈழத்தமிழரும் தமக்கெதிரான அசுரசக்திகளின் இன்னல்கள், தடைகளிலிருந்து வெற்றிபெற்று சிறப்பாக வாழ தைப்பூசத்திருநாளில் பக்திபூர்பமான வழிபாடுகளை மேற்கொண்டு உரிய சிறப்புக்களைப் பெற்று பொலிவுறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களைக் கட்டுப்படுத்தவே நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

கொழும்பு, ஜன.24

கடந்த வருடம் சமூக வலைத்தளங்களில் ஒரு இலட்சத்துக்கும் மேலான நிர்வாணப்படங்கள் பரிமாறப்பட்டன எனத் தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் 8 ஆயிரம் சைபர் குற்றங்கள் நடந்துள்ளன என்றும் தெரிவித்தார்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட வரைவு தொடர்பான விவாதத்தை நேற்று நாடாளுமன்றத்தில் ஆரம்பித்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த ஆண்டின் முதல்வாரங்களில் சமூக ஊடகங்களில் 500க்கும் மேற்பட்ட ஆபாசப் படங்களைத் தங்களிடையே பரிமாறிக் கொண்டுள்ளனர். கடந்த ஆண்டு 6 ஆயிரத்து 690 இணையவழிக் குற்றங்கள் நடந்துள்ளன.

இந்தப்புள்ளிவிவரங்கள்குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பதியப்பட்டமை மட்டுமே. வெளிவராத சம்பவங்கள் பல இருக்கலாம். நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட வரைவு குற்றங் களையும் கிளர்ச்சிகள் இன,மத ஐக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் குழப்பங்களையும் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி எவரையும் பழி வாங்கும் நோக்கமில்லை - என்றார். (எ-இ)



## பொது நூலகங்களுக்கு மும்மொழிப் புத்தகங்கள்

மன்னார், ஜன. 24

நாடு முழுவதும் அரச கரும மொழிக் கொள்கையை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தும் பொருட்டு நூலகங்களுக்கு மும்மொழி நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மன்னார் பொதுநூலகத்துக்கான மும்மொழி நூல்கள் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன. (ச-60-213)



யாழ்ப்பாணம், உடுவில் பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா, உடுவில் பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ப-66)

மணமகள் தேவை

யாழ் இந்து குடும்பத்தைச் (V) சேர்ந்த 1976 இல் பிறந்த உத்திரம் 4ம் பாதம் (31 பாவம்) ஆசிரியர் தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் எதிர்பார்க்கிறோம்.

075 182 4218

வீடு வாடகைக்கு உண்டு

யாழ் திருநெல்வேலி பிள்ளையார் வீதியில் மிகவும் அழகான வீடு வாடகைக்கு உண்டு. (ரைல்ஸ் பதிக்கப்பட்டுள்ளது) அற்றாச் வாத்றும், நான்கு அறைகள், பாக்கிங் வசதிகள் உண்டு.

077 345 0039, 077 348 0039

நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

077 138 7596, 021 222 9306, 071 9999 306

(CS 27760) V-1

## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### சபை நிதி 2024 (கட்டம் I)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 11.01.2021 ம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவரும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதி சேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: 021205 8867 ) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.01.24 ஆம் திகதியில் இருந்து 2024.02.07 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். அவர்களிடமிருந்து 2024.01.24 ஆம் திகதியிலிருந்து 2024.02.07 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

09. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 2024.02.08 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

11. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.01.30 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பிட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூ) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/4/Council/ PI/2024/01 | இருபாலை சி.சி. தமிழ் கலவன் பாடசாலை வீதி புனரமைத்தல் | 7.89 | 90 நாட்கள் | C7 அல்லது C6( வீதி நிர்மாணம் ) | 77 நாட்கள் | 79,000.00 | 23.05.2024 |
| NP/14/41(13)/4/Council/ PI/2024/02 | போயிட்டி - வினோபாஜி இணைப்பு ஒழுங்கை புனரமைத்தல் | 7.02 | 90 நாட்கள் | C7 அல்லது C6 ( வீதி நிர்மாணம் ) | 77 நாட்கள் | 71,000.00 | 23.05.2024 |
| NP/14/41(13)/4/Council/ PI/2024/03 | போதிப்பிள்ளையார் வீதி புனரமைத்தல் | 3.99 | 90 நாட்கள் | C8 அல்லது C7 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 40,000.00 | 09.05.2024 |
| NP/14/41(13)/4/Council/ PI/2024/04 | காளிகோவில் ஒழுங்கை 1ஆம் ஒழுங்கை புனரமைத்தல் | 2.15 | 60 நாட்கள் | C8 அல்லது C7 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 22,000.00 | 09.05.2024 |
| NP/14/41(13)/4/Council/ PI/2024/05 | சிவகுல வீதி - துவாரகை வீதி இணைப்பு வீதி புனரமைத்தல் | 2.78 | 60 நாட்கள் | C8 அல்லது C7 ( வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 28,000.00 | 09.05.2024 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.

2024.01.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்புடன் கைதானார் முதியவர்!

யாழ்ப்பாணம், ஜன. 24

கோடா மற்றும் கசிப்புடன் முதியவர் ஒருவர் அவரது வீட்டில்வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலிலேயே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 60 லீற்றர் கோடி, 5 லீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன. கைதான நபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-125)

# துப்பாக்கிச் சூட்டில் தேரர் பலி!

கொழும்பு, ஜன. 24

கம்பஹா மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றுக்கு காரில் வந்த இனந்தெரியாத நால்வர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தேரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தேரர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## துணுக்காய் பிரதேச சபை
## மல்லாவி பொதுச்சந்தை வீதி கடைத்தொகுதிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி கோரல் - 2024

துணுக்காய் பிரதேச சபைக்கு சொந்தமான மல்லாவி சந்தை வீதி கடைத்தொகுதிகளை வருடாந்த குத்தகை அடிப்படையில் பகிரங்க கேள்வி கோரலில் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கை பிரஜைகளிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தவிசாளர். பிரதேசசபை. துணுக்காய் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 14.02.2024 திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. ஒப்பந்தம் மேற்கொண்டவராலேயே மேற்படி வியாபார நிலையம் தொடர்ச்சியாக நடாத்தப்பட வேண்டும்.
3. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மூன்று மாதகால வாடகைப்பணத்தை பாதுகாப்பு வைப்பாக ஒருவார காலத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதுடன் சபையுடன் ஓர் ஒப்பந்தமும் செய்ய வேண்டும் தவறும் பட்சத்தில் தாமாகவே இதிலிருந்து விலகியதாக கருதி அடுத்த கேள்விதாரருக்கு குறித்த நிலையம் வழங்கப்படும்
4. விண்ணப்பம் பெறவரும் போது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் பிரதியுடன் வரவேண்டும்.
5. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

**கேள்விப் படிவம் வழங்கப்படும் காலம்** :- 25.01.2024 – 14.02.2024 மு.ப10.00 மணி வரை
**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி** :- 14.02 பி.ப12.30 மணிவரை
**கேள்வி திறக்கப்படும் திகதி** :- 14.02.2024 பி.ப 2.00 மணி


**குத்தகைக்கு வழங்கப்படவுள்ள கடைகள் விபரம்**

| கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (மாதவாடகை* 3மாதம் ) ரூபா (வரிநீங்கலாக) | மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் (வரிநீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புபணம் ரூபா | ஆகக் குறைந்த கேள்வித்தொகைக்கமைய செலுத்த வேண்டிய மாத வாடகை ரூபா |
|---|---|---|---|---|
| FF 01 | 9,750.00 | 500.00 | 1,000.00 | 3,250.00 |
| FF 02 | 9,750.00 | 500.00 | 1,000.00 | 3,250.00 |
| FF 04 | 9,750.00 | 500.00 | 1,000.00 | 3,250.00 |
| FF 06 | 9,750.00 | 500.00 | 1,000.00 | 3,250.00 |
| FF 09 | 9,600.00 | 500.00 | 1,000.00 | 3,200.00 |
| FF 10 | 9,600.00 | 500.00 | 1,000.00 | 3,200.00 |
| FF 11 | 9,600.00 | 500.00 | 1,000.00 | 3,200.00 |
| FF 12 | 9,600.00 | 500.00 | 1,000.00 | 3,200.00 |

**செயலாளர்,**
**பிரதேச சபை, துணுக்காய்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1953



மறைவு 23 . 01 . 2024

## பொன்னம்பலம் செல்வநாயகி

### இளைப்பாறிய உபதபால் அதிபர் (கைத்தொழில் பேட்டை)

ஆவரங்கால் மேற்கு சந்தை வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம்- செல்வநாயகி நேற்று (23-01-2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னையா-தங்கம்மாவின் அன்பு மகளும், சறோயினிதேவி (கனடா) இராசநாயகம் (சிவசக்தி மணிமண்டப முகாமையாளர் ஆவரங்கால்) காந்திமலர், பத்மாவதி, கங்காதேவி (கனடா), காலம் சென்றவர்களான சிவநேசன், வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (கனடா), பாஸ்கரன் (கனடா), சரஸ்வதி காலம் சென்ற குணவதி ஆகியோரின் மைத்துனியும், நிரோஜன், சர்மிலன், சர்மிலா, வினோஜா ஆகியோரின் அத்தையும், அஞ்சனா, றதீபன், அனிரா, நிரூஜன், கஜன் ஆகியோரின் சித்தியும், ஆதீஸ், ஆதிரன், ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சந்தை வீதி,**
**ஆவரங்கால்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 216 1849, 077 739 3286**

(CS 41624) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 02 . 1952



மறைவு 23 . 01 . 2024

## திருநாவுக்கரசு சுரேந்திரச்சந்திரன் (மணி அண்ணை)

வண்.வடமேற்கு, நாலுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சுரேந்திரச்சந்திரன் அவர்கள் நேற்று (23.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு நாகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்ற குமாரசுவாமி பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், மாங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், துசானி (ஆசிரியர், கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம்), வானதி (யாழ். பல்கலைக்கழகம், 3ம் வருடம் கலைப்பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் ஓய்வூதியம், பிரதேச செயலகம் யாழ்ப்பாணம், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) பாசமிகு மாமனாரும், பி.லாகவியின் பாசமிகு பேரனும், கிருஸ்ணரஞ்சினி, புஸ்பரஞ்சினி, திருஞானச்சந்திரன் (ஜேர்மனி), தில்லைரஞ்சினி (ஆசிரியர், யா/இந்து மகளிர் கல்லூரி), தில்லையற்கரசன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான நாகச்சந்திரன், பாலச்சந்திரன் மற்றும் திருஞானரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகாம்பிகை (ஜேர்மனி), ஜெகதாம்பிகை (ஜேர்மனி), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2024) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் கோவிலடி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 514 8576**

(CS 27748) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியை குலைக்கும் முயற்சியில் ஜனாதிபதி!

## சுதந்திர மக்கள் சபை குற்றச்சாட்டு

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியை சீர்குலைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார் என்று சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நான்தான் நிதி அமைச்சர், பொருளாதார அமைச்சர் என்றெல்லாம் ஜனாதிபதிதான் கூறிவருகின்றார். அவர் உட்பட சிலருக்கு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியை சீர்குலைக்கும் தேவைப்பாடு உள்ளது. அதனால்தான் குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் இப்படியான கருத்துகள் பரப்பட்டு வருகின்றன. நான் நிதி அமைச்சை கேட்கவும் இல்லை. அது வழங்கப்படும் என உறுதியளிக்கப்படவும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவில் உள்ள ஒருவருக்குத்தான் நிதி அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும் - என்றார்.

(ஏ-44)

# பெயர்மாற்றம்

நாவலடி ஒழுங்கை வீரமாணிக்க தேவன் துறை மயிலிட்டியில் வசிக்கும் ஆனந்தசோதி நவநீதரம் ஆகிய எனது பெயரை ஆனந்தசோதி நவநீதம் எனமாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் ஆனந்தசோதி நவநீதம் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகிறேன்.

ஆனந்தசோதி நவநீதம்

(CS 27749 V-1)

# நல் வாழ்த்துக்கள்

## கௌரவ சிவஞானம் சிறீதரன்

(தமிழரசுக் கட்சியின் தலைவர்)




பாராளுமன்றில் நீதிக்காக குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினரான **கௌரவ சிவஞானம் சிறீதரன் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.** அவர்களுக்கு எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

**க.துரைசிங்கம் குடும்பத்தினர்**
**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**
**பாலாவி வடக்கு, கொடிகாமம்.**

(cs.4 1622)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும், கண்ணீர் அஞ்சலியும்



கடந்த 23.12.2023 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியற்துறை மாணவி

## அமரர் செல்வி கு. சுபீனா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
அரச்றிவியல் ஒன்றியம்,
அரசறிவியற்துறை - கலைப்பீடம்,
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(cs.53590) (N-1)

# தேவை

அரசாங்கத்திற்காக செயற்படும் ஒரு நிறுவனத்தின் காரியாலயத்திற்காக இடவசதி தேவைப்படுகின்றது. 400 சதுர அடி (அண்ணளவாக) தனியான உட்செல்லும் வசதி, மின்சார வசதி, நீர் இணைப்பு மற்றும் மலசலகூட வசதிகள் உள்ளடங்கலாக. பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் மற்றும் ஈ-மெயில்விலாசத்துடன் தயவு செய்து உரிமையாளர் மட்டும் தொடர்புகொள்ளவும்.

**கிளை முகாமையாளர் சீ.ஜீ.எவ்,**
**இல 17 விவசாய சேவை ஒழுங்கை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

தொலைபேசிஇலக்கம் - **077 390 4385**

**முகாமையாளர்,**
**நிர்மாண உத்தரவாத நிதி**

(cr.53646) (N-1)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடை Stage 1,2,3 கல்வியங்காடு, குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்காக கேள்வி திறத்தலானது 24.01.2024ம் திகதியிடப்பட்டிருந்தது குறித்த விலை மனுக்கோரல் திறத்தல் (Tender Opening) **தவிர்க்க முடியாத காரணத்தால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது** என்பதை அறியத்தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு **021 221 5978.**

**ஆணையாளர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(cr.41617) (N-1)

# 07 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 • 11 • 1947



மறைவு 14 • 01 • 2017

## அமரர் Dr. குமாராசாமி மகேசன்

(முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலை, வைத்திய நிபுணரும், தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் பொறுப்பதிகாரியும் - யாழ்ப்பாணம்)

**திதி: சதுர்த்தசி**

ஆண்டுகள் ஏழு ஆனது ஐயா!
உங்கள் நினைவு எங்கள் மனதில் என்றும்
நீங்கள் மீண்டும் இவ்வுலகில் வந்து
சேவைகளையும், உதவிகளையும்
செய்யவேண்டும் என்று எண்ணுகின்றோம்.

**நண்பர்கள்**

(cs.53639) (N-1)

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 01.05.1953 மறைவு : 24.01.2012

## அமரர் கனகசபை விஜயரெத்தினம் (ஞானம்)

(உரிமையாளர்- கண்ணன் பெயின்ற்ஸ், ஞானம் பெயின்ற்ஸ்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போய் பன்னிரண்டு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் முகம் எங்கள் இதயமதில் இறுதிவரை
நிலைத்து நிற்கும் அப்பா!
எங்கள் உயிராக வாழ்ந்து - எம்
உணர்வுகளோடு கலந்த எங்கள் அப்பவே!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எம்முள்ளே கலந்து நிலைத்து வாழ்கின்றீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

விஜய் மஹால்,
பழைய தபாற் கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு.

குடும்பத்தினர்.
ஞானம் பெயின்ற்ஸ்,
558, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.

(CS 53677)(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. - தனியார் பணியாளர்கள் மோதல்

## நால்வர் மருத்துவமனையில்

வவுனியா, ஜன. 24

வவுனியா பேருந்து நிலையத்தில் தனியார் மற்றும் இ.போ.ச. பேருந்துகளின் சாரதி மற்றும் நடத்துனர்களுக்கு இடையே நேற்று இடம்பெற்ற மோதலில் நால்வர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பேருந்து தரிந்து நின்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பேருந்தும் அவ்விடத்தில் தரித்துள்ளது.

இதன்போதே இரண்டு பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு இடையே நேரசூசி தொடர்பில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது சில நிமிடங்களில் கைகலப்பாக மாறியுள்ளது. இதையடுத்தே இரண்டு பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் நால்வரும் மருத்துவம்னையில் அனுமதிக்கப்பட்டனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டதையடுத்து, அவர்கள் இரண்டு பேருந்துகளையும் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (அ-ம-18)

## இலங்கையில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'1983ஆம் ஆண்டு இலங்கையில் வன்முறைகள் ஆரம்பித்த காலத்தில் எனது தந்தையாரின் தலைமையிலான லிபரல் கட்சி ஆயிரத்து 800 இலங்கைத் தமிழர்களைக் கனடாவில் குடியேற்றியது. இந்தத் தொகை கடந்த பல தசாப்தங்களில் அதிகரித்து இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடாக கனடா பார்க்கப்படுகிறது.

அத்துடன் கனடாவின் வளர்ச்சிக்கு தமிழர்களின் பங்களிப்பு வியக்கத்தக்கது. இதன் காரணமாகவே 2016ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தை தமிழர் வரலாற்று மாதமாக கனேடிய அரசாங்கம் பிரகடனம் செய்தது.

இந்தநிலையில் இலங்கைத்தமிழர்களின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கனடா தொடர்ந்தும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் செயற்பட்டு வருகிறது. இந்தச் செயற்பாடுகள் தொடரும்' - என்றார். (அ-ம)

## சுதந்திரத்தைப்...

கட்சியின் புதிய தலைவரான எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்நிலைக் காப்பு சட்டவரைவு மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்த நாட்டில் அடக்குமுறை தொடரும் நிலையில் இந்த நிகழ்நிலைக்காப்பு சட்டமூலமும் புதியதொரு வழியில் அடக்குமுறைக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் ஏற்படுகின்றது. 'நமக்கு இங்கு முடிவு உள்ளது' என்ற விடயத்தை புத்தபெருமான் போதித்துள்ளார், ஆனால் சிலர் இதனைப் புரிந்துகொள்ளாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த நாட்டில் ஏன் இப்படியொரு சட்டம் கொண்டுவரப்படுகின்றது என்பது பற்றி நாங்கள் சிந்திக்கவேண்டும். கடந்த 80 ஆண்டுகளாக இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினையை கௌரவமான முறையில் தீர்த்து வைப்பதற்கு சிங்களத் தலைவர்கள் தவறியுள்ளனர் என்பதையே வரலாறு சொல்கின்றது. பிரச்சினைக்கு நிலையான தீர்வைக்காண்பதற்கு இருந்த சந்தர்ப்பங்களை இந்த நாட்டில் இருந்த சிங்களத் தலைவர்கள் தள்ளிபோட்டே வந்துள்ளனர். சமாதானத்துக்கான பயணம் என்பது வெகுதூரத்திலேயே உள்ளது. இதனை எட்டிப்பிடிப்பதற்குதிராணியுள்ள தலைவரை மக்கள் தேடுகின்றனர்.

கருத்துகளைப் பதிவு செய்யும் சுதந்திரத்தை இந்தச் சட்டமூலம் தூக்கி கடாசிவிடுகின்றது. பறித்தெடுக்கப்படுகின்றது.

தமிழர்களுக்கு எதிராக இருந்த அடக்குமுறை சிங்கள மக்களை நோக்கி நகர்த்தப்படுகின்றது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கொடூரத்தை அரகலய காலத்தில் தான் சிங்கள செயற்பாட்டாளர்கள் உணர ஆரம்பித்தனர்' - என்றார். (அ-ம-44)

## நயினை...

நேற்றுச் செவ்வாய்க்கிழமை மூன்றாவது நாளாக அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினமும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் ஆலயம் நோக்கித் திரண்டு வந்து எண்ணெய்க் காப்புச் சாத்தினர்.

நேற்று மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் இடம்பெறுமென முன்னர் ஆலய அறங்காவலர் சபையினரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகளவு அடியவர்கள் திரண்டிருந்தமையால் நேற்று இரவு 8 மணி தாண்டியும் அடியவர்களுக்கு எண்ணெய்க் காப்புச் சாத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. எனினும், நேற்று இரவு அம்மனுக்கு மாத்திரம் எண்ணெய்க் காப்புச் சாத்துவதற்கே அனுமதி வழங்கப்பட்டது.

ஆலயக் கும்பாபிஷேகத்தைச் சிறப்பிப்பதற்கான யானை நேற்று ஆலயத்தை வந்தடைந்தது.

நயினாதீவு நாகபூசணியின் மகா கும்பாபிஷேக நாளான இன்று காலை 6 மணியளவில் அடியவர்களுக்கான தனியார் படகுச் சேவை குறிகட்டுவானிலிருந்து ஆரம்பமாகும். இந்நிலையில் மகா கும்பாபிஷேகத்திற்குச் செல்லும் அடியவர்களின் நன்மை கருதி இலவச படகுச் சேவை இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணிஅம்மனின்மகாகும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்காக செங்கோல் ஆதீனம்கயிலைக்குருமணி103ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்திய ஞான பரமாச்சாரிய சுவாமிகள் நயினாதீவுக்கு வருகை தந்துள்ளார். (அ-ம-66)

## பல்வேறு...

துள்ளனர். காணாமலாக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் ஆரம்பித்து நேற்றையதினம் 7ஆவது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு அருகில் அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

நாங்கள் எங்கள் பிரச்சாரத்தை பல நாடுகளுக்கு விரிவுபடுத்துகிறோம், மேலும் போராடும் தமிழர்களின் சார்பாக வாதிடுவதற்கு ஐரோப்பா மற்றும் பிற பிராந்தியங்களுக்குச் செல்ல விரும்பும் நபர்களை நாடிவருகிறோம்.

தமிழர் விடுதலையை நசுக்குவதை ஆதரிக்கக்கூடாது என்று வலியுறுத்தி சுவிற்சர்லாந்து அதிபருக்கு கடிதம் எழுதினோம். அதற்குப் பதிலாக, ஜனநாயகக் கருவியான வாக்கெடுப்பைப் பயன்படுத்துவதற்கு அவர்களின் ஆதரவைக் கேட்டோம். இதே நடவடிக்கையை ஜப்பான் பிரதமரிடமும் கோரத்திட்டமிட்டுள்ளோம். இந்த வாரத்தில் அவருக்கு ஒரு கடிதம் அனுப்பப்படும்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் 'இமாலய பிரகடனத்தை' ஏற்றுக்கொண்டமைக்கும் எமது வருத்தத்தைத் தெரிவிக்க விரும்புகிறோம். இந்த அறிவிப்பு பைடனின் நிகழ்கால மற்றும் கடந்த கால வெளியுறவுக் கொள்கைக்கு முரணானது - என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-ம-110-18)

## புலிகளை...

அரசமைப்பைமீறும் செயலாகும் என பொங்கி எழுந்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

அத்துடன், நாட்டை பிளவுபடுத்தமாட்டோம் என்ற உறுதிமொழியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களிடம் மீண்டும் பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சரத் வீரசேகர கூறியவை வருமாறு,

'இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், தான் கட்சித்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் முதற்பணியாக, கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று, புலிகளுக்கு மலர்தூவி நினைவேந்தல் நடத்தியுள்ளார்.

இந்த நாட்டைப் பிளவுபடுத்தவே புலிகள் போராடினர். எனவே, அந்த பயங்கரவாதிகள் மரணித்த இடத்துக்குச் சென்று மலர் வைத்து நினைவேந்தல் நடத்துகின்றாரென்றால் அவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நாட்டைப் பிளவுபடுத்தும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர் என்பதையே புலப்படுத்துகின்றது.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையிலான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமானம் செய்துள்ளனர். இவ்வாறு இருக்கையில் சிறீதரன் எம்.பி. எவ்வாறு மாவீரர் துயிலும் இல்லத்துக்குச்சென்று, புலிகளை கௌரவித்து நினைவேந்தல் நடத்த முடியும்? நாட்டைப் பிளவுபடுத்தும் நிலைப்பாட்டில்தான் கூட்டமைப்பினர் தற்போதும் உள்ளனர். எனவே, பிளவுபடுத்தமாட்டோம்என்ற உறுதிமொழியை அவர்களிடம் மீளப் பெறவேண்டும்' - என்றார். (அ-ம-44)

## கச்சதீவில்...

கச்சதீவுத் திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இலங்கையில் இருந்து 4 ஆயிரம் பக்தர்கள், இந்தியாவிலிருந்து 4 ஆயிரம் பக்தர்கள் என 8 ஆயிரம் பக்தர்களை அனுமதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருவிழாவில் பங்குபற்றுவோருக்கான சுகாதாரம், போக்குவரத்து உட்பட அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உணவு போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

குறித்த முன்னாயத்தக் கூட்டத்தில் யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத்தந்தை, யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர், கடற்படையின் பிராந்திய பொறுப்பதிகாரி, பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் துறைசார் திணைக்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-125-66)

## பெலியத்த...

இந்தப் படுகொலையின் சூத்திரதாரிகளைக் கைதுசெய்வது தொடர்பாகப் பொலிஸ் உயர்மட்டத்தில் நேற்று விசேட கூட்டமொன்றும் இடம்பெற்றுள்ளது.

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள நிழல் உலக தாதா கொஸ்கொட சுஜி இந்தத் தாக்குதலுக்குத் திட்டமிட்டிருக்கலாம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து கொஸ்கொட சுஜியுடன் தொடர்பில் உள்ள குற்றவாளிகள் தொடர்பான பெயர் பட்டியலை பதில் பொலிஸ்மா அதிபர் கோரியுள்ளார்.

அத்துடன், நேர்த்தியான முறையிலேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதால், பாதுகாப்புப் படைகளில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையே மோதலுக்குக் காரணம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (அ-ம-44)

## மூளையில்...

வட்டுக்கோட்டையிலுள்ள தனது உறவினரின் வீட்டில் தங்கியிருந்த அந்தப் பெண் நேற்றுத் திடீரென உயிரிழந்ததையடுத்து மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையிலேயே மூளையில் ஏற்பட்டிருந்த குருதிக்கட்டியே இறப்புக்குக் காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-27)

## தொடர்...

கணேசன் (வயது-40) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இறப்புத் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கிறிஸ்தவ கலையுலகங்கள்

*சர்வதேசக் கருத்தரங்கம்*

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத் துறையும் தென்னிந்தியா - தமிழ்நாடு பாளையங்கோட்டைத் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறை மற்றும் ஆய்வு மையமும் இணைந்து 'தமிழ்க் கிறிஸ்தவக் கலை உலகங்கள்' என்ற கருத்தரங்கை ஜனவரி மாதம் 29ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை நடத்தவுள்ளன.

தமிழ்ப்பண்பாட்டுக்கு கிறிஸ்தவக் கலைகளின் பங்களிப்பும் கிறிஸ்தவத்துக்கு தமிழ் கலைவடிவங்களின் பங்களிப்பும் தமிழ்ப்பண்பாட்டின் பன்மைப் பரிமாணங்களைப் புரிந்து கொள்வதில் முக்கியமானவை. அந்தவகையில், நுண்கலைத்துறையின் ஐந்தாவது கருத்தரங்கானது இதுவரை அதிகம் பேசப்படாத இவ்விடயத்தில் கவனமெடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நிகழும் அங்குரார்ப்பண நிகழ்வில் அருட்தந்தை ஜெயசீலன் 'தமிழ் கிறிஸ்தவக் கலைகள்' என்ற தலைப்பிலும், மொரட்டுவ பல்கலைக்கழக விரிவுரையாளரும் கட்டடக்கலைஞருமான சாகர ஜெயசிங்க 'வட இலங்கையின் 19ஆம் நூற்றாண்டுக் கட்டடக் கலையையும் ஆராய்தல்' என்ற தலைப்பிலும் திறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வின் இறுதியில் கேரளாவில் தமிழ்மொழியில் ஆற்றப்படும் கத்தோலிக்க ஆற்றுகை வடிவம் பற்றிய ஆவணப்படமும் திரையிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முன்னராக, அதேதினம் மாலை 3 மணிக்கு 'பண்பாட்டு ஒட்டு' என்ற தலைப்பிலமைந்த வட இலங்கைத் தேவாலயங்கள் பற்றிய ஒரு காட்சியும் நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து, 30ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் எட்டு அமர்வுகளில் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்படவுள்ளன. கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சிகளிலும் பிற அமர்வுகளிலும் அனைத்துக் கலை ஆர்வலர்களையும் ஆய்வாளர்களையும் மாணவர்களையும் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ம-66)

# மருத்துவ அதிகாரிகள் மீளவும் போராட்டம்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று முதல் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. மருத்துவர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவு இந்த மாதம் முதல் வழங்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆயினும் அந்த மேலதிகக் கொடுப்பனவை அரசாங்கம் தற்சமயம் வழங்குவதில்லை என்று தீர்மானித்துள்ளது என வெளியாகியுள்ள தகவல்களை அடுத்தே பணிப் புறக்கணிப்புப் போராட்டம் பற்றிய அறிவிப்பை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ளது. (எ-இ)

**வீடு வாடகைக்கு தேவை**

சங்கானைக்கும், மானிப்பாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் 3 பேர் கொண்ட அரச உத்தியோகத்தர் குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.

**076 365 1646/077 775 9636**

**வேலைக்கு ஆட்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள/ அனுபவமற்ற வேலை ஆட்கள் தேவை.

1. முகாமையாளர்
2. அலுவலக உதவியாளர்

P.P.EXP
183, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
077 386 6250

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 25.12.2023 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர் விமலேஸ்வரி இராஜராஜேஸ்வரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.01.2024) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (26.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுகொள்ளவும்

17, கிழுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி.
T.P.:- 021 223 0042
குடும்பத்தினர்

**விற்பனை பிரதிநிதி தேவை**
[Sales Rep]

பிரபல்யமான மென்பான உற்பத்தி விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதி தேவை (Sales Rep) முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **077 583 3045**

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
**0777 554 528**

**பணியாளர்கள் தேவை**

திருமுருகன் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு பணியாளர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
திருமுருகன் கொம்நெற்
321, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
077 755 4528

**மரண அறிவித்தல்**



தோற்றம்
04 . 03 . 1940

மறைவு
23 . 01 . 2024

**அமரர் கந்தையா முத்துலட்சுமி**

நவாலி அரசடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முத்துலட்சுமி நேற்று (23.01.2024) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா முத்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, லிங்கேஸ்வரி, மங்களேஸ்வரி, நகுலேஸ்வரி (கனடா), திருச்செல்வம் (லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்), சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் வினாசித்தம்பி, இராஜேந்திரம் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), பாலகிருஷ்ணன், செல்வஸ்ரீதரன் (கனடா), பரமேஸ்வரி (லண்டன்), சுதர்ஷினி (லண்டன்), கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான லட்சுமி, மகேஸ்வரன், பொன்மலர் மற்றும் தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு சகோதரியும், நிறஞ்சினி, நிறஞ்சனா, சர்மிலா, காயத்திரி, தர்சினி, கஜீவன், கஜேந்திரன், டரன், பவீனா, கபிலாஷ், யதுசனா, மிதுஷனா, சஞ்சீவன், சந்தியா, பிரித்தீபா, பிரித்தீபன், ஹரிஸ், தருண், டிபிகன், கருணாகரன், திருமார்பன், குகதீபன், சுரேஸ், தரண், கோபிகா, ரஜீத், கனுஷனா ஆகியோரின் அன்பு பேத்தியும் தர்ஷனா, அட்சரா, அஸ்வின், ஹர்ஷனா, லஷ்விகன், ரஸ்மிகன், தஸ்வின், திவானுஷன், அட்சயா, நகீஸ், நஸ்லிகா, ரேயா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆரியம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

நவாலி அரசடி
மானிப்பாய்.

தகவல்: **குடும்பத்தினர்**
**077 617 8224, 077 061 3314**

# சயன்ஸ் அக்கடமி

நல்லூர் - முருகன் ஆலயம் முன்பாக
நாவலர் வீதி, அரியாலை.
தொ.பே : 077 538 8471, 077 312 6807

**புதிய கல்வியாண்டு - 2024 ஆரம்பம்**

**தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்**

நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலுடன் 40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் கல்வியிலும், ஒழுக்கத்திலும் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் 2023 ஆம் ஆண்டின் சாதனைப் பெறுபேறுகளுடன்

**கல்வியாண்டு 2024 இல் சிறப்பாக ஆரம்பமாகின்றது.**

வெற்றித்தேர்வு ஆரம்பக்கல்விப் பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
விசேட புலமைப்பரிசில் வகுப்புகள்

தரம் 6 முதல் தரம் 11 வரை
தமிழ்மொழி மூல வகுப்புக்கள்
English Medium Classes

இவற்றுடன் ICT, சிங்களம், ஆகிய பாடங்களும்

இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று உங்கள் பிள்ளைகளும் சாதனையாளர்களாக எம்முடன் இணைந்திருங்கள்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இன்றே பதிவுகளை மேற்கொள்ளலாம்.

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தி [illegible] தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org